# தேவன் தெரிந்தெடுத்த ஆராதனை ஸ்தானம்

## Gods Chosen Place Of Worship

## 65-02-20

1. நாம் நின்றவண்ணம் ஜெபத்தில் தலைவணங்குவோமாக. இப்போது நம்முடையத் தலைகள் சாய்ந்த வண்ணம் இருக்க (நமது இருதயங்களும் கூட சாய்க்கப்பட்டு இருக்கின்றனவென்று நம்புகின்றேன்.) இங்குள்ளவர்களில் எத்தனை பேர் இன்றிரவு விசேஷமாக, ஜெபத்தில் தங்களை ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்களோ, நீங்கள் உங்கள் கைகளை உயர்த்தி, “ 'தேவனே, நான் தேடிக் கொண்டிருப்பதை இன்றிரவு எனக்குத் தாரும்' : என்று வேண்டிக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

2. பரலோகத்திலுள்ள எங்கள் பிதாவே, நாங்கள் தாழ் மையுடன் 'தேவரீர்ன் கிருபையின் சிம்மாசனத்தின் முன் தேவ தூதர்களும், கேரூபீன்களும், எல்லா பரலோகச் சேனைகளும் ஒன்றுகூடியிருக்கும் இடத்திற்கு புறப்படுகிறோம். ''உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் ஒரு அடைக்கலான் குருவியும் தரை யிலே வழாது'' என்று அவர் கூறினார் (மத். 10: 29). இங்கே நூற்றுக்கணக்கான ஜனங்கள் விசேஷ வேண்டுதலுடன் தங்கள் தலைகளை வணங்கியிருக்கையில் அவர் எவ்வளவு அதிகமாக இதை குறித்து கண்ணோக்கமாயிருப்பார். பிதாவே, இன்றிரவு இந்த ஏழ்மையான உலகத்தைக் கண்ணோக்கிப் பாரும். ஏனென்றால் நாங்கள் எளிய ஜனங்களாயிருக்கிறோம்.

3. நாங்கள் இங்கே கூடி எங்களுடைய விசுவாசத்தை ஜெபத்துக்குப் பதில் கொடுக்கும் ஜீவனுள்ள தேவனாகிய உமக்கு எடுத்துரைத்து, தேவனே நாங்கள் வேண்டுதல் செய்கின்றோம்..... உம்மிலிருக்கும் எங்கள் விசுவாசத்தை

அறிக்கை செய்தவர்க ளாய்.... நாங்கள் விருத்தசேதனம் செய்யப்படாத இருதயங்களும் காதுகளும் உள்ள உலகத்தின் டுவிலிருந்து வெளியே வந்துள் ளோம். இன்றிரவு நாங்கள் எங்கள் கைகளை உயர்த்தி நாங்கள் எளியவர்கள் என்பதைக் காட்டுகின்றோம். அன்புள்ள தேவனே ஒவ்வொருவருடைய வேண்டுதலுக்கும் பதிலளித்தருளும்.

4. ஆக, பிதாவே, நீர் எங்களை இன்றிரவு வார்த்தையிலே சந்திக்க வேண்டுகின்றோம். எங்களைத் திருத்திக்கொள்ளவும், இன்றைய நாளில் எப்படி வாழவேண்டும் என்பதையும், எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதையும் என்ன செய்யவேண்டும் என்பதையும் விளக்கமாய் அறிந்துக்கொள்ள நாங்கள் இங்கே வந்திருக்கின்றோம். ஏனென்றால் தீர்க்கத்தரிசிகளால் முன்கூறப்பட்டுள்ள அடையாளங்களினால் கர்த்தரின் வருகை சமீபமாயி ருக்கிறது என்பதை அறிந்திருக்கிறோம். உம் முடையப் பிள்ளைக ளுக்குப் பூரண விடுதலை அளிக்கப்படும் நேரத்தை, கர்த்தாவே , நாங்கள் நெருங்குகின்றோம். தேவனே, நாங்கள் ஒவ்வொருவரும் அங்கே இருக்க கிருபை செய்தருளும் , பிதாவே, ஒவ்வொருவரும் கைவிடப்படாமல் இருப்பார்களாக. இதுவே நாங்கள் இங்கே வந்திருக்கும் நோக்கமாயிருக்கிறது. கர்த்தாவே, நாங் கள் உம்மை நேசிக்கிறோம். நாங்கள் அந்த வேளைக்காகத் தயார் செய்துக்கொண்டிருக்கிறோம்.

5. எங்களோடு நீர்ப் பேசவும், வியாதியஸ்தருக்குச் சுகம் மளிக்கவும் இன்றிரவு. மறுபடியும் வேண்டிக்கொள்கின்றோம். இந்தக் கூட்டத்திலிருக்கும் எல்லா வியாதியஸ்தரையும் நோயா ளிகளையும் குணப்படுத்த வேண்டுகின்றோம், கர்த்தாவே. முக்கியமாக ஆத்மீக அவசியத்தைக் கொடுத்தருளும். பாவமுள்ள ஒவ்வொரு ஆத்து மாவையும் இரட்சிக்கவும், ஒவ்வொரு விசுவாசியையும் பரிசுத்த ஆவியினால் நிரப்பவும், உம்மில் விசுவா சிக்கும் பிள்ளைகளில் பலத்தையும் வல்லமையையும் நிரப்பியரு ளவும் நாங்கள் வேண்டிக்கொள்ளுகின்றோம், பிதாவே, இவை களைக் கொடுத்தருளும். நாங்கள் அதிகமாகக் கேட்கிறோம். ஏனென்றால் நீர் கேட்கச் சொன்னீர்-ஏராளமாய்க் கேட்கவும், பெரியவைகளைக் கேட்கவும், எங்களுடைய சந்தோஷம் நிறை

வாயிருக்க பலவற்றைக் கேட்கவும் கற்பித்தீர். அவைகளை இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வேண்டிக்கொள்ளுகின்றோம். ஆமேன். (உட்கார்ந்துக் கொள்ளலாம்)

6. மறுபடியும் திரும்பிவந்து இந்தப் பள்ளிக்கூடத்தின் மேடையின்மேல் நான் நின்று சுவிசேஷத்தைக் கேட்க வந்துள்ள ஜனங்கள் முன் நிற்பதை உண்மையாகவே எனக்களிக்கப்பட்ட ஒரு சிறப்புரிமை என்று கருதுகிறேன் . நான் சத்தியத்தை அறிந்த வரை உங்களுக்குச் சத்தியத்தை எடுத்துரைக்க தேவன் கிரு பையுடன் எனக்கு உதவிசெய்ய அவருடைய தயவை நாடுகின் றேன். அவர் சிங்கத்தின் வாயை மூடினவர், ஒரு மனிதனின் வாயையும் அவரால் மூடமுடியும். மாறானதையும் தப்பிதமா னதையும் நான் போதிக்க முயற்சித்தால் நான் பிரசங்கிக்காத படி அவர் என் வாயை மூடவேண்டுமென்று நான் உண்மை யாகவே ஜெபிக்கிறேன். ஏனென்றால் உண்மையாகவே நானும் பரலோகத்திலிருக்க ஆசிக்கிறேன். மாறாக போதித்தால் நான் அங்கே இருக்கவே முடியாது. அத்துடன் நான் தவறாக அப்படி போ தித்தால் நான் ஒரு கள்ளத் தீர்க்கத்தரிசியாவேன். பொய்யான ஒரு காரியத்தைச் செய்கிறவனாக இருப்பேன். நான் அப்படி தவறு செய்தால் நல்லதற்கும் கெட்டதற்கும் உள்ள வித்தியா சத்தை அறியாமலிருப்பேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பா ராக.

7. ஆக, நாளைக் காலையில், அது தேவனுக்குச் சித்தமா னால், விவாகமும் விவாகரத்தும் என்ற தலைப்பில் பேச இருக்கி றேன். நீங்கள் பென்சில்களையும் காகிதங்களையும் கொண்டு வருவீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். போதிக்க அதிக நேரம் ஆகாது . ஆனால் நான் விரும்புவதாவது முதலாவது நான் இங்கே, இந்தியாவிலே, வர உங்களுக்கு வாக்களித்தது இந்த நோக்கத்தைக் கொண்டுதான் . நாளைக் காலையில் இதை பிரசங்கிப்பேன் , முயற்சிப்பேன்; நாளைக்காலையில் வாய்ப்பு கிடைக்கவில்லையானால், நாளை இரவு அதைப் பிரசங்கிப்பேன் . இந்த இரண்டுவித எண்ணங்களைப் பற்றியும் கர்த்தருக்குச் சித்தமானால், நாளைக் காலையில் பிரசங்கிக்க முயற்சிப்பேன். சத்தியம் என்ன என்பதை அறியத் தேவன்

நமக்கு உதவி செய்வாராக. சத்தியத்திலும் வெளிச்சத்திலும் நாம் நடக்க, தேவன் நமக்குச் சத்தியம் என்ன என்பதை அறிவிப்பாராக.

8. நமக்கு, நீங்கள் அறிந்திருக்கிறபடி ஒரு கருப்பு சிநேகி தன் இருந்தான். அவன் என்னிடம், ''சகோதரன் பில்லி, எனக்கு- எனக்கு நதிக்கரையிலே ஒரு சிரமமும் இருக்கக் கூடாது'' என்றான். நான் அதற்கு, ''என் கையில் டிக்கட் இருக்க வேண் டும். விசில் ஊதும்போது, எனக்கு அங்கே தடையொன்றும் இருக்கக்கூடாது. ஏதாவது தடை இருக்குமானால், அதை நான் இப்போதே சரிபடுத்த தேவனை வேண்டிக்கொண்டேன். ஏனென் றால், அந்தக் காலையில் பேழை அடுத்த கரைக்கு அது இழுக் கப்படும்போது இருளாகவும் புயல் காற்று வீசிக்கொண்டும் இருக்கும். அப்போது எனக்கு ஒரு தடையும் இருக்கக்கூடாது, தடைகளை இப்போதே அகற்ற வேண்டும்'' என்றேன். அதற் காகவேதான் இங்கே நாம் கூடியுள்ளோம். தடைகளை அகற்றி அந்த சமயம் நாம் அந்த உலகத்துக்கு நடந்துச் செல்ல முயற் சிக்கிறோம்.

9. ஆக, இன்றிரவு அதிக நேரம் நான் பேசப்போவதில்லை. ஏனென்றால் நாம் நாளைக்கு இரண்டு ஆராதனைகளை நடத்தப் போகிறோம். அப்போது அங்கிருந்து வேறொரு இடத்துக்குப் போகவேண்டியவனாக இருக்கிறேன்-அதிக ஆராதனைகள் இருக் கின்றன.

10. ஆனால் இப்போது, உபாகமம் என்னும் புத்தகத்திலே 16-ம் அதிகாரத்திலிருந்து வாசிக்க விரும்புகிறேன். உபாகமம் 16 - ம் அதிகாரம் முதல் மூன்று வசனங்கள்; 16:1-3:

''ஆபிப் மாதத்தைக் கவனித்திருந்து , அதில் உன் தேவு னாகிய கர்த்தருக்குப் பஸ்தாவை ஆசரிக்கக் கடவாய்; ஆபிப்மாதத்திலே இராக்காலத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினாரே. கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில், உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவின் பலியா கிய ஆடு மாடுகளைப் பலியிடு வாயாக. நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளை நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம்

நினைக்கும்படி, பஸ் காப் பலியு டனே புளிப்புள்ள அப்பம் புசியாமல், சிறுமையின் அப்பமாகிய புளிப்பில்லாத அப்பங்களை ஏழு நாள் வரைக்கும் புசிக்கக் கடவாய்; நீ தீவிரமாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபடியினால் இப்படிச் செய்ய வேண்டும்''.

11. இப்போது , இன்றிரவு நான் பேசப்போகும் தலைப்பு தேவன் தெரிந்தெடுத்த ஆராதனை ஸ்தானம் என்பதாகும். நீங்கள் கவனிப்பீர்களானால், ஆ-பி- ப் என்னும் மாதத்துக்கு ஏப்ரல் மாதம் என்று பொருள். ஏப்ரல் மாதம் அவர்களை வெளியே கொண்டு வந்த மாதமாகும். இப்போது நடக்கும் அதிசய மான காரியம் என்னவென்றால், இன்றிரவு, தேவனை, ஆராதிக் கிறவர்களாகிய நாம் வாழும் இந்நாளிலே ஜனங்களின் பல வித்தியாசமான எண்ணங்களைக் காண்கிறோம். எதுவரையிலும் வித்தியாசமான எண்ணங்கள் இருக்கின்றனவோ அதுவரை- பல வித்தியாசமானக் கேள்விகள் எழுகின்றன. கேட்கப்படும் ஒவ் வொரு கேள்விக்கும் ஒரு உண்மையான பதில் உண்டு. ''இது என்ன?'' என்று நான் கேட்டால், ''இது ஒரு சாய்வுமேஜை'' என்பார்கள் அவர்கள். அது எதற்காக?' என்ற கேள்வியும் எழுவது விளங்குகிறதா?

12. இப்போது, அங்கே... சிலர், "அது சாய்வுமேஜையல்ல, அது ஒரு மரப்பலகை'' எனலாம். அது ஒரு மரப்பலகையால் செய்யப்பட்டிருந்தாலும் அது ஒரு சாய்வு மேஜையாயிருக்கிறது. அந்தக் கேள்விக்கு ஒரு உண்மையான பதில் இருக்கிறதை கவனியுங்கள். எதைக் குறித்தாவது நான் ஒரு கேள்வியைக் கேட்டால் அதற்கு ஒரு உண்மையான பதில் இருந்தே தீரும். கிட்ட தட்ட எல்லாக் கேள்விகளுக்கும் ஒரு உண்மையான நேரடியான பதில் உண்டு. ஆகவே, நமது வாழ்கையில் எழும்பும் ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு உண்மையான நேரான பதில் இருந்தே தீரு கிறது .

13. ஆக, இன்று நாம் பல உலக மக்களால் கேட்கப்படும் கேள்விகளைக் கேட்கிறோம் - இன்று கேட்கிறோம்.... நான் ஒரு பிரசங்கியாயிருப்பதால், கடலுக்கப்பால் பலமுறை பிரயாணம் செய்து உலகம் முழுவதையும் சுற்றி, புத்தமதம், முகம்மதிய

மதம், ஷிண்டோ மதம், ஜெய்ன மதம்-இவைகளைப்போலுள்ள பல உலக மதங்களை அறிய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இங்கே, அமெரிக்காவிலேயும், மேல் நாடுகளிலும் உள்ள வெவ் வேறு சபை ஸ்தாபனங்களை, பண்டைய கத்தோலிக்கச் சபை யைத் துவக்கி கிரேக்க சபைவரை ஆராய்ந்து பார்த்தேன். அவைகளின் வெவ்வேறு சடங்காச்சாரங்களையும் அறியலானேன். சபை ஸ்தாபன க ர ல த் து தொள்ளாயிரத்துக்கு மேலுள்ள புரோட்டஸ்ட்டன்ட் சபைகளையும் கண்டேன் இப்போது, அவை கள் ஒவ்வொன்றும்-அவர்களின் போதனைகளை நீங்களும் கேட் டிருக்கிறீர்கள்; அதற்காக நானும் அவைகளை நிந்திக்கவில்லைஅவைகள் ஒவ்வொன்றும் தன்னிடமே சத்தியம் இருப்பதாகக் கூறுகின்றன~ தம்மிடம்தான் இருப்பதாகக் கூறுகின்றார்கள்..... அந்தப் போதனை யை அந்த சபைகளில் இருப்பவர்கள் விசுவா சிக்க வேண்டியதாகிறது. ஏனென்றால், அவர்கள் அவர்கள் தாங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்தை, நித்தியத்தை, அந்த சடை யின் போதனையின் மேல் அஸ்திபாரப்படுத்தத் துணிந்தி ருக்கிறார்கள். ஒரு சபைக்கும் மற்றொரு சபைக்கும் போதனை வித்தியாசங்கள் பல. ஆக, அவர்கள் சுமார் தொள்ளாயிரம் கேள்விகளைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆக , அவைத்தொள்ளாயிரம் கேள்விகளாயிருப்பினும், அவைகளுக்கு ஒரே ஒரு சரியான பதில் உண்டு. இன்றிரவு, நாமெல்லாரும் பர லோகத்துக்குச் சென்று நம்மை நேசிக்கும் கர்த்தராகிய இயேசுவைச் சந்திக்க முற்படுகிறதினால், நான் வேதவாக்கியங்களில் அந்த ஒரு பதிலைத் தேடி கண்டுபிடிக்க முற்படுகிறேன் .

14. ஆக, அது ஒரு வேதாகமக் கேள்வியாக இருந்தால், அதற்கு ஒரு வேதாகம பதில் இருக்கும். அந்த பதில் ஒரு மனிதக் கூட்டத்திலிருந்தோ, அல்லது ஏதோ ஒரு ஐக்கியத்திலிருந்தோ, அல்லது ஒரு கற்றறிந்தவரிடமிருந்தோ , அல்லது ஒரு ஸ்தாபனத்திலிருந்தோ வரக்கூடாது . அது தேவன் ஆரா தனை யில் சந்திக்கும் இடமாகிய வேதவாக்கியத்திலிருந்து வரவேண் டும். தேவன் தமது ஜனங்களைச் சந்திக்கும் ஏதோ ஒரு இடம் நிச்சயமாக உண்டு.

15. ஆக, இங்கே உபாகமத்திலே நாம் காண்கிறபடி, துவக்கத்தில், மோசே வேதவாக்கியத்தை ஆரம்பத்திலிருந்து கூறுகிறபடி, எகிப்திலிருந்து எப்படி அவன் பலத்த கரத்தாலும் வல்லமையினாலும் வழிநடத்தி அவர்களை நிலை நிறுத்தினான் என்ப தைப் பார்க்கிறோம். அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து வெளியே அழைக்கப்படும்வரை அவர்கள், ''தேவ ஜனங்கள்'' என்ற ழைக்கப்பட்டார்கள். ''தேவனுடைய ஆலயம்'' என்று அழைக் கப்பட்டார்கள். ஏனென்றால் ஆலயம் என்பது சபையைக் குறிக்கிறது. அல்லது திருச்சபை என்றால் சரியாக வெளியே அழைக்கப்பட்டவர்கள்'' என்று பொருள்படுகிறது. வெளியே அழைக்கப்பட்டு இருக்கிறவர்கள். திருச்சபையாயிருக்க அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து அழைக்கப்பட்டார்கள்.

16. ஆக, அவர்கள் - அவர்கள் ஆலயத்தை நிலை நிறுத்திய தற்குமுன் அல்லது அவர்கள் எதையும் செய்யத் துவக்கின தற்குமுன் தேவன் ''என்னை நீங்கள் ஆராதிக்கத்தக்க ஒரு ஸ்தானத்தை நான் தெரிந்து கொள்வேன்; அங்கே என் நாமத்தை வைப்பேன்'' என்றார். அவர் தாமே தெரிந்துக் கொண்ட அந்த இடத்திலே மாத்திரம் தேவன் மனிதனைச் சந்திப்பார். அவர் தம்முடைய ஸ்தானத்தைத் தெரிந்துக்கொண்டார். அவர் தெரிந்தெடுத்த இடத்திலே தமது நாமத்தை விளங்கும்படிச் செய்தார் . இதை இரண்டாம் வசனம் கூறுகிறது. ஜனங்கள் அவரைத் தொழுது கொள்ள அவர் தெரிந்தெடுத்த ஒரு இடத்திலே அவர் தமது நாமத்தை விளங்கும்படி செய்தார். அந்த இடம் எங்கே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதே நாம் இப்போது செய்ய வேண்டிய காரியமாகும் .

17. தொள்ளாயிரத்துக்கு மேற்பட்ட போதனைகளுடன் நாம் அஞ்ஞானிகளின் மத போதனைகளின் எண்ணிக்கையையும் கடந்து செல்கின்றோம். அப்படி இருந்தும் நாம் கிறிஸ்தவ மதத்தைப்பற்றி பேசுகிறோம். அஞ்ஞானிகள் தவறான போதனைகளை குறித்து எனக்கும் சிந்தனை இல்லையானால், நான் அவர்கள் மத்தியில் போயிருக்கமாட்டேன். கிறிஸ்தவமே உண்மையானது - உண்மையானது கிறிஸ்தவமதமே. நான் கிறிஸ்தவனாக இருப்பத னால் நான் இப்படிக் கூறவில்லை. அது

சத்தியம் என்பதை விசுவாசிப் பதனால் இப்படிக் கூறுகின்றேன். சரியான மதம் கிறிஸ்தவமே.

18. எங்கே முகமது நபியின் கல்லறை இருக்கிறதோ அங்கேயும் சென்றிருந்தேன். அங்கே நான்கு மணிக்கு ஒரு முறை வெள் ளைக் குதிரையை மாற்றி கட்டுகிறார்கள் கிறிஸ்துவுக்குப் பிறகு வந்த ஒரு பெரிய ஆசாரியனும், கிறிஸ்துவுக்குப்பின் வந்த ஒரு மதத்தலைவருமானவர் அவர் என்கிறார்கள். அவரைத் தீர்க்கத்தரிசி என்றும் கூறுகிறார்கள். இதில் எனக்குச் சந்தேகமில்லை. மெக்காபீ சகோதரருக்குப் பிறகு வந்தவர் முகமது நபி என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் அவர் மரித்தபின் உயிர்த்தெழுந்து உலகத்தை ஜெயிப்பதாகக் கூறினார். இப்போதும் 4 மணிக்கொரு முறை ஒரு வெள்ளைக் குதிரையையும் காவற்காரரையும் அவருடையக் கல்லறையண்டை மாற்றுகிறார்கள். அவர் வந்து உலகத்தை ஜெபிக்க இரண்டாயிரம் ஆண்டுகளாகக்காத்துக் கொண்டிருக்கிறார்கள் . ஆனால் பாருங்கள்....

19. புத்தரைப் பாருங்கள். புத்தர் பல வருடங்களுக்குமுன், ஏறக்குறைய 2, 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந் தவர். ஜப்பான் தேசக்--தேசக் கடவுள் . அவர் கன்ப்யூஷியஸ்ஸைப்போல ஒரு வேதாந்தியாக இருந்தார். இந்த ஸ்தாபகர்களும் பல ஞானிகளும் தங்கள் வேதாந்தங்களுடன் மரித்து கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார்கள். ஆனால் கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபித்த இயேசு கிறிஸ்துவின் கல்லறையோ காலியாக இருக்கிறது என் ஜீவனைக் கொடுக்கவும் அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு'' என்று சொல்லி உலகத்தில் ஜீவித்தது இயேசுவே. அவர் இன்னும் ஜீவிக்கிறார். அவர் ஜிவிக்கி றார் என்பதை நாம் அறிவோம். எப்படியெனில் அவர் நம் மோடு இருந்து அற்புதங்களாலும் அடையாளங்களாலும் அவர் தம்மை நிரூபிக்கிறார் இஸ்ரவேலரை வனாந்தரத்திலே வழிநடத்தின அக்கினி ஸ்தம்பம் இன்னும் நம்முடன் இருக்கிறது. அதைப் புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். இன்று அவர் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் தாம் இன்றைய தினத்திற்கென்று வாக்குத்தத்தம் பண்ணினதை வெளிப்படுத்தி நிறை வேற்றி

நிரூபிக்கிறார். ஆகவே, மற்ற அஞ் ஞான உலகம் முடிந்து விட்டது. இன்று கிறிஸ்தவமே நிலை நிற்கிறது.

20. இப்போ து, தேவன் எங்கே சந்திக்கிறார் என்பதைக் குறித்து தொள்ளாயிரத்துக்கும் அதிகமானக் கேள்விகள் உள்ளன. மெத்தடிஸ்ட் சபையைச் சந்திக்கிறார், அல்லது பேப்டிஸ்ட் சபையை சந்திக்கிறார், அவர் இதையும் அதையும் வேறொன்றை யும் சந்திக்கிறார்'' என்கிறார்கள். ஆக, ஒருகேள்வி இருக்கிறது. அதாவது ஒவ்வொரு வனும் பயத்துடனும் நடுக்கத்துடனும் தன் னுடைய இரட்சிப்பைத் தேடி கண்டு பிடிக்கவேண்டும். ஆனால் இன்றிரவு, தேவன் எங்கே சந்திக்கிறார், தேவன் ஜனங்களை எங்கே சந்தித்து அவர்களுடன் ஆராதனை செய்கிறார் என்பதை நான் வேதாகமத்தில் கண்டுபிடிக்க முற்படுகிறேன். அப்படி கண்டுபிடிக் கப்பட்டதே சரியானால், அங்கே மாத்திரம் தேவன் சந்திக்கிறார்.

21. இப்போது உபாகமத்திலிருந்து குறித்த வேதபாகத்தை கவனிப்போம். உபாகமம் என்பது கிரேக்கு பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இது இரண்டு அர்த்தங்கொண்ட ஒரு வார்த்தை . உபாகமம் என்றால் இரண்டு, சட்டங்கள் என்று பொருள். கிரேக்கு வார்த்தைக்கு இரண்டு வித்தியாசமான சட்டங்கள் என்று பொருள்படுகிறது. இந்த இரண்டு சட்டங்களையும்தான் தேவன் வைத்திருக்கிறார். அவைகளிலொன்று ஜீவ பிரமாணம் மற்றொன்று மரண பிரமாணம் அவரைப் பின்பற்றுவது, அவருக்கு ஊழியம் செய்வது, அவரை ஆராதிப்பது ஜீவனாகும்; அவரை தள்ளி விடுவது மரணமாகும். தேவனில் இரண்டு சட்டங்கள் இருக்கின்றன.

22 ஆக, இந்த பிரமாணங்களிலொன்று 2. ல சத்துக்கு-- உலகத்துக்குச் சீனாய் மலையிலே அறிவிக்கப்பட்டது. அதைத் தேவன் மோசேயுக்கும் இஸ்ரவேலருக்கும் கொடுத்தார். அந்த பிரமாணம் அவர் களுக்கு உதவியாயிருக்க அளிக்கப்பட வில்லை. அவர்கள் பாவிகள் என்பதை அவர்களுக்கு உணர்த்தவே அது கொடுக்கப்பட்டது அந்த நியாயப்பிரமாணம்

கொடுக்கப்படும்வரை பாவம் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். தண்டனைக்குள்ளாக்காத ஒரு சட்டம் சட்டமா காது. ஆக, நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவமாம். பாவத்தின் சம்பளம் மரணம். ஆகவே, தேவன் நியாயப்பிரமாணத்தை உண்டாக்கும் வரை அவர்களின் மீறுதல்களை அவர் கணக்கிடவில்லை. ஒரு மணிக்கு இருபது மைலுக்குமேல் நீ காரோட்டக்கூடாது என்ற ஒரு சட்டம் இருக்குமானால், நீ காரை ஒரு மணிக்கு இருபது பையில் ஓட்டலாம். அப்படிச் செய்யக் கூடாது என்று ஒரு சட்டம் இருக்குமானால், அந்த சட்டத்தை மீறுவது நம்மை தண்டனைக்குள்ளாக்குகிறது .

23 . ஆக , மரணம்-சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமே மரணபிரமாணமாக இருக்கிறது. அது மனி தனைப் பாவி என்றழைத்தது. தேவனுடைய சுட்டத்தை மீறின வன் மரித்தான் . நியாயப்பிரமாணத்திலே இரட்சிப்பு இல்லை. அது உன்னைப் பிடித்துச் சிறையிலடைக்கும் ஒரு போலீஸ்காரனாக இருக்கிறது. சிறையிலிருந்து வெளியே கொண்டுவர அதனிடம் ஒன்றுமில்லை. பின்னர் தேவன் வேறொரு பிரமாணத்தைக் கொடுத்தார். அதைக் கல்வாரி மலையில் கொடுத்தார். அங்கே பாவம் இயேசு கிறிஸ்துவில் எண்ணப்பட்டது. அங்கே அவர் அபராதம் கட்டினார். பிரமாணத்தினாலல்ல- அவருடைய கிருபையினால் நீ இரட்சிக்கப்பட்டாய். தேவன் நிர்ணயித்த ஆலோசனையின்படி தேவன் நீ இரட்சிக் 3.ப்பட்டிருப்பதை முன் குறித்தார்.

24. ஆக, உபாகமம் என்னும் இரண்டு பிரமாணங்களைக் காண்கிறோம். இரண்டு சட்டங்களைக் குறித்துப் பேசுகிறோம். இரண்டு பிரமாணங்கள் இருந்தன, ஒன்று ஜீவ பிரமாணம் மற்றது மரண பிரமாணம் .

25. ஜனங்களுக்கு இரண்டு உடன்படிக்கைகளும் கொடுக்கப் பட்டன. நாளைக் காலையில் இவைகளைப் பற்றிப் பேசப்போகின் றோம். அவைகளில் ஒன்று ஆதாமுக்கு நிபந்தனையுடன் சொடுக் கப்பட்டது : ''நீ இதைச் செய்தால், அதைச் செய்யாதே ...'' என்பது. ஆனால் அந்த கற்பனை கள்

கைகொள்ளப்படவில்லை. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலே அதை மீறினார்கள். பின்னர் தேவன் இரண்டாம் உடன்படிக்கையை ஆபிரகாமுடன் செய்தார். அது நிபந்தனையற்று இருந்தது: நீ என்ன செய்திருக் கிறாய் அல்லது என்ன செய்வாய் என்பதல்ல, நான் அதை ஏற்கனவே செய்து முடித்திருக்கிறேன்'' என்பது. அது கிருபை அதுவே ஜீவ பிரமாணம். இதைத் தேவன் ஆபிரகாமுக்கும் அவனுக்கு பின்வரும் அவனுடைய வித்துக்கும் செய்தார் அது ஆபிரகாமின் எல்லா வித்துக்கும் உண்டானது; இஸ்ரவேல் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்பட்டு இருப்பார்கள்'' என்று வேதாகமம் கூறுகிறது. பவுல், 'உள்ளத்தில் யூதனானவனே யூதன்; புறம்பாக யூத னானவன் யூதன்ல்ல'' என்னும் போது வெறும் யூதனை மாத்திரம் குறிக்காமல் இஸ்ரவேலரை மொத்தமாகக் குறித்தான் . நாம் நேற்றிரவு பேசினபடி, புறம்பாக இருந்தவர்கள் வம்சத்தின்படி ஈசாக்கின் சந்ததியாராயிருந்தார்கள் ஆனால் தேவனளித்த நியாயப்பிரமாணம் கிறிஸ்துவின் மூலம் அளிக்கப்பட்டது கிறிஸ்து ஆபிரகாமின் இராஜரீக வித்தாயிருந்தார், ஆக, கிருபையினால் எல்லா இஸ்ரவேலரும் இரட்சிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

26. இப்போது 2 -ம் வசனத்தை கவனி. உபாகமம் 16-ம் அதிகாரம் இரண்டாம் வசனம்: ''நான் தெரிந்தெடுத்த இடத்தில் நீ பலியிடுவாயாக, '' அவர், ''நான் தெரிந்தெடுத்த இடத்தில் நீ தேவனை ஆராதிப்பாயாக'' என்றார்- வேறொருவன் தெரிந்தெடுத்த இடத்தில் அவர் ஆராதிக்கச் சொல்லவில்லை, ''நான் தெரிந்தெடுத்த இடம்'' என்றார். அவர் ஒரு ஸ்தானத்தைத் தெரிந்தெடுத்திருப்பாரானால், அது எங்கே இருக்கிறது என்பதையும் அதைப்பற்றி அவர் எ ன் ன கூறியிருக்கிறார் என்பதையும் நாம் கண்டுபிடிக்க முடியும். நான் உண்மையிலே அவரை ஆராதிக்க விரும்புவதினால், நான் அதைக் கண்டு பிடிக்க வேண்டும். நா மெல்லாரும் அவரை ஆராதிக்க இங்கே கூடியுள்ளோம். நாம் இங்கே மெத்த டிஸ்ட்டா கவும், கத்தோலிக்கராகவும், யெகோ வா விட்னஸ் ஸ்தாபனமாகவும், கிறிஸ்தவ விஞ்ஞானிகளாகவும், நாமெல்லாரும் இங்கே உட்கார்ந்து எதையோ தேடுகிறோம். நாம் சத்தியத்தை அறிய

விரும்புகின்றோம். ''நீ சத்தியத்தை அறி வாய் , சத்தியம் உன்னை விடுதலையாக்கும்'' என்று வேதாகமம் கூறுகின்றது. யாரோ ஒருவர். ''நீ என்ன செய்து கொண்டிருக் கிறாய் என்பதை நீ அறியாய், எப்படி செய்ய வேண்டுமென்பதை நீ அறியும் வரை நீ அதை அறியாதிருக்கிறாய்-நீ அதை அறியும் வரை அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதை அறியாதிருக்கிறாய். நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதை நீ அறிய வேண்டும். அப்போது நீ அதை எப்படிச் செய்ய வேண்டுமென் பதை அறிவாய்'' என்றார்.

27. இது தேவன் தம்மை ஆராதிக்கிறவர்களுக்காக ஒரு சந்திக்குமிடத்தைத் தெரிந்தெடுத்திருக்கிறார் எ ன் று ம் , அந்த இடத்தில் மாத்திரமே தேவன் தம்மை ஆராதிக்கிறவர்களைச் சந்திக்கிறார் என்பதையும் காட்டுகிறது .

28. அத்துடன், அவர் தம்மை ஆராதிக்கிறவர்களுக்காகத் தெரிந்தெடுத்த இடத்திலே அவர் தமது நாமத்தை அங்கே விளங் கச் செய்வதாகக் கூறியுள்ளார். இந்த இடம் எங்கே இருக்கிற தென்று வேதவாக்கியங்களில் தேடிக் கண்டுபிடிப்போமாக. அவர் தெரிந்தெடுத்த இடம் எல்லா காலத்துக்குமுரியதாக இருப்பதால் அது வேதாகமத்தில் எங்கேயோ இருக்கிறது. ஏனென்றால் கட்டாயமாக தேவன் தமது நாமத்தை அந்த இடத்தில் விளங்கப் பண்ணியிருந்தால். அவர் தமது ஜனத்தைச் சந்தித்து அங்கே அவர்களுடன் ஆராதிப்பார் - அல்லது ஜனங்கள் அவரை அங்கே ஆராதனைச் செய்வார்கள்.

29. மாறாத உன்னதமான தேவன் மாறமாட்டார். மனிதன் மாறுகிறான். தேவன் கூறினது எந்த சமயத்தில் கூறப்பட்டதாக இருந்தாலும், அதன்மேல் உன்னுடைய உயிரையும் தியாகம் செய்யலாம். ஏனென்றால் அது சத்தியம். என் நம்பிக்கை யை ஸ்திரப்படுத்தும் பொருள் வேதாகமமே. ஏனென்றால் அதைக் கொடுத்த தேவன் மாறாதவர்-மனிதனின் வார்த்தையோ ஏமாற்றும். இந்த வருடம் நான் சென்ற வருடத்தில் கற்றதை விட அதிகமாக கற்க வேண்டும். நீங்களும் அவ்வண்ணமே செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும்... நாம் சமயத்தால் அளக்கப்பட்டவர்கள். ஆகவே, நாம் சமயத்துக்கேற்றவாறு

அறிவைச் சம்பாதிக்கிறோம். ஆனால் தேவன் முடிவற்றவர். முடிவற்றவருக்கு அறிவைச் சம்பாதிப்பது அவசியமில்லை. துவக்கும்போதே அவர் பூரணர். அவருடைய எல்லா எத்தனங்களும் பழுதற்றவை.

30. தேவன் ஒரு சமயம் செய்தபடியே என் றென்றைக்கும் செய்கிறவராயிருக்கிறார். இது தப்பானால், அவர் ஆரம்பத்தில் செய்தது தவறு. அவர் ஏற்றுக்கொள்ளும் அடிப்படை யில் ஒரு வன் தேவனிடம் இரட்சிக்கப்படவருவானானால், அவன் அதே அடிப்படையில் எல்லாசமயத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அது தான் சரி. ஒருவன் ஆத்மீகச் சுகப்படுத்தலுக்கு தேவனிடம் அவர் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் வருவானானால், அடுத்தவனையும் அதே அடிப்படையில் ஏற்றுக்கொள்ள வேண்டிய வராய் இருக்கிறார். அல்லது அவர் முதல் மனிதனை ஏற்றுக் கொண்ட அடிப்படை தவறு. தேவன் மனிதனைச் சந்திக்க ஒரு அடிப்படையை உண்டாக்கி இருக்கிறார். அவன் என்ன செய்ய வேண்டுமென்பதைக் குறித்தும், எப்படி செய்யவேண்டுமென்ப தைக் குறித்தும் ஒரு அடிப்படையை ஏற்படுத்தி இருக்கிறார். அது ஏதேன் தோட்டத்தில் பலியாக்கப்பட்ட செம்மறியாட்டுக் குட்டியின் இரத்தத்தின் மூலமாக ஏற்படுத்தப்பட்டது. தேவன் ஒருபோதும் மாறினதில்லை. எந்தகாலத்திலுமில்லை. அவர் மாறவே இல்லை.

31. மனிதனை எப்படி இரட்சிக்கவேண்டும் என்பதை அவர் முடிவு செய்தார் இன்று நாம் அந்த இரட்சிப்பினால் மனிதனுக் குக் கற்பிக்க முயற்சிக்கிறோம்; படிக்க வைக்க முயற்சித்தோம்; கற்பிக்க முயற்சித்தோம்; ஸ்தாபனமாக்க முயற்சித்தோம்; மற்ற எல்லாத் துறையிலும் முயற்சித்தோம். விசுவாசத்துக்கு அழைக்க முயற்சித்தோம், ஜனங்களை அசைத்து இழுத்து வந்தோம், உட்புறம் வர ஞானஸ்நானம் கொடுத்தோம், எல்லா விதத்திலும் முயற்சி செய்தோம். கடிதங்களின் மூலம் அழைத்தோம், ஆனாலும் தேவன் வகுத்தது அப்படியே தான் இருக்கிறது: தேவன் இரத்தத்தின் கீழ் மாத்திரம் மனிதனை சந்திக்கிறார். ஆதியிலே இரத்தமே - தேவனுடைய வழியாக இருந்தது. இரத்தமே - தேவனுடைய வழி. இன்றிரவும் இரத்தமே.

மனஸ்தாபப்படுவதும் மற்ற சடங்குகளைச் செய்வதும் நல்லதே. ஆனால், இரட்சிப்பு இரத்தத்தினால் மாத்திரம் வருகிறது மனிதனை இரட்சிக்க தேவன் இரத்தத்தை மாத்திரமே வழியாகக் கொண்டார். அவர் அதை மாற்றுவதில்லை.

32. யோபுவும் பலியையே செலுத்தினான். அவன் தான் நீதிமான் என்பதை அறிந்திருந்தான். ஏனென்றால் அவன் தேவனுக்கு வேண்டிய பலியையே செலுத்தியிருந்தான் .

33. இப்போது, அவர் தமது நாமத்தை விளங்கப்பண்ணின இடம் எது என்பதையும் அறியத்தேடுவோமாக. அவர் தமது நாமத்தை எங்கே விளங்கப்பண்ணினார் என்பதைக் கண்டு பிடிக்கப்போகிறோம். தேவனுடைய நாமம் என்ன என்றும், அதை விளங்கப்பண்ணின இடம் எது என்பதையும் நாம் தெரிந்துக் கொண்டோமானால், ஆராதிக்கும் இடத்தையும் சீக்கிரம் கண்டு கொள்வோம். இந்த எல்லா காரியங்களும், உண்மையிலேயே, வரப்போகும் காரியங் களின் சாயலாக இருந்தன.

34. எப்படி சந்திரன் சூரியனின் சாயலாய் இருக்கிறதோ அப்படியே எல்லா நியாயப்பிரமாணங்களும் வரப்போகும் காரி யங்களை அறிவிக்கின்றன. சந்திரன் எப்படி சூரியன் இல்லாத நேரத்திலே வெளிச்சத்தைக் கொடுக்கிறதோ, அப்படியே சபையும்! தேவகுமாரனுக்கு பதிலாக ஊழியம் செய்கிறது. குறைவான வெளிச்சமாகிய சபை விசுவாசிகள் தேவனை சேவித்து தேவனுடைய குமாரனுக்குப் பதிலாக பிரகாசிக்கிறார்கள். சூரியன் உதயமாகும் போது சந்திரனை நீங்கள் காண்பதில்லை. ஏனென்றால் அது அஸ்தமித்துவிடுகிறது. அதற்குத்தன் வெளிச்சம் அவசியமில்லை. அதற்கு வேண்டிய வெளிச்சத்தை சூரியனிட மிருந்து பெறுகிறது.

35. ஆக, புருஷனும் மனைவியும் போல, சூரியனும் சந்திர னும்போல, கிறிஸ்துவும் சபையும் இருக்கிறார்கள் இந்தக் காரியங்களெல்லாம் கிறிஸ்துவின் சாயலாக இருக்கின்றன. ஒவ் வொரு பலியும், பண்டிகையும், பழைய ஏற்பாட்டிலிருக்கும் ஒவ்வொன்றும் கிறிஸ்துவின் சாயலாய் இருக்கிறது . நிழல் எப்

'படி தரையை தாங்குகிறதோ அப்படி .. இப்போது இங்கேயே பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளவைகளினால் அந்த ஆரா திக்கும் ஸ்தானத்தைக் கண்டு பிடிக்கப்போகிறோம். அந்தக் காரியங்கள் என்ன வென்றும் காணப்போகின்றோம்

36 ஆக, தரையின் மேல் நிழல் விழும் போது, அந்த நிழல் மனிதனுடையதா, ஸ்திரீயினுடையதா, அல்லது மிருகத்தனு டையதா, அல்லது வேறெதினுடையதா என்று அறிகிறீர்கள். எப்படியெனில் அது தரையின் மீது நிழல் விழச்செய்கிறது. சிறுகச் சிறுக - நிழல் எதிர்மறையாயிருக்கிறது. உண்மையானது இல்லையானால் நிழல் விழாது-ஆகவே, உண்மையானது சாயலுடன் நெருங்கி வருகையில் சாயலானது உண்மையானதில் மூழ்கிவிடுகிறது. சாயலும் உண்மையானதும் ஒன்று சேரும்போது இரண்டும் உண்மையானவைகளாகின்றன. பழைய ஏற்பாட்டிலுள்ள எல்லா காரியங்களும் வரப்போகும் காரியங்களின் சாயலாக இருந்ததால், கிறிஸ்துவும் வரப்போகும் காரியங்களின் சாயலாக இருந்தார்.

37. பழைய ஏற்பாட்டின் மாதிரிகளிலே நாம் காண்கிறபடி அவர் தமது நாமத்தை விளங்கப்பண்ணினார் -அது இப்போது எந்த இடத்திலிருக்கிறது? நான் கூறினபடி, ஒரு நிழல் தரையின் மீது விழுமானால், அது ஒரு பொருளின் சாயலாக இருக்கிறது. அது ஒரு மாதிரி பழைய ஏற்பாட்டின் காரியங்களை பழைய ஏற்பாட்டின் சாயல்களினால் அவரை ஆராதிக்கும் நாம் காணக்கூடியவர்களாய் இருக்கிறோம்.

38. ஆக, எல்லா பண்டிகைகளும், எல்லா ஓய்வு நாட்களும், எல்லா கூடாரங்களும், எல்லா மலைகளும், கூடாரத்திலிருக்கும் அத்தனையும் , கிறிஸ்துவின் மாதிரியாக இருக்கின்றன. இங்குள்ள ஆலயத்திலே இதை மறுபடியும் மறுபடியுமாக பிரசங்கிக்கக் கேட்டோம். இவைகளைக் கொண்டு நாம் ஒவ்வொரு பிரமணத்தையும், சபையையும், ஸ்தாபனத்தையும், பின்னால் விடப்பட்டு இருக்கக் காண்கிறோம். இவை நமது ஓட்டத்திலும் தள்ளப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு பிரமாணமும்,

ஒவ்வொரு சபையும் ஒவ்வொரு ஸ்தாபனமும் முழுதுமாக விடப்பட்டு இருக்கிறது! அவைகளுக்கு ஓர் இடமுமில்லை.

39. பழைய ஏற்பாட்டில் சபை ஸ்தாபனத்தைக் குறிக்க பலவந்தமாகக் கூட்டிச் சேர்க்கப்பட்ட பாபேல் கோபுரத்தை விட வேறொரு மாதிரியுமில்லை. சபைகளின் ஒற்றுமையைக் குறிக்க பாபேல் கோபுரமே மாதிரியாக இருக்கிறது. இந்த உயரமான கோபுரத்தைக் கட்ட எல்லா சிறிய தேசங்களையும் கூட்டி ஓர் இடத்துக்கு அழைத்து நிம்ரோத் என்று சொல்லப்பட்டவனே. உண் ை ம யி ல் அது ஒரு மத ஆராதனையாயிருந்தது. ஆனால் அதற்கு தேவ வார்த்தையில் குறிப்பில்லை. பழைய ஏற்பாட் டில் கூறப்பட்டிருக்கும் பாபேல் கோபுரமே சபை ஸ்தாபனத் துக்கு மாதிரியாக இருக்கிறது. நிம்ரோத் எழுப்பினதும் ஒரு மத மாக இருந்தது . ஆனால் அது தேவ வார்த்தையால் உண்டான மதமாக இல்லை.

40. எந்த சபை ஸ்தாபனத்திலும் தேவன் தமது நாமத்தை விளங்கப்பண்ணவில்லை. அப்படி இருக்குமானால் அதற்கு வேத வாக்கிய அத்தாட்சி வேண்டும். தேவன் ஸ்தாபனங்களிலிருப்ப தாக அவர்கள் கூறுகின்றனர். ஆனால் அது அப்படியல்ல. அவர் பல இடங்களில் தமது நாமத்தை விளங்கப்பண்ணவில்லை. ஏனென் றால் அவர் ஒரே இடத்தில் விளங்கப்பண்ணுவதாகக் கூறுகின்றார் - அந்த ஒரு இடத்திலே மாத்திரம்... தேவன் தமது நாமத்தை விளங்கப்பண்ணின இடம் எங்கள் நடுவில் இருக்கிறது என்று ஒவ்வொரு ஸ்தாபனமும் கூறுகிறது. ஆனால் அது வேதவாக்கி யத்துக்கு மாறாக இருக்கிறது . ஆனால் அவர் தமது நாமத்தை எங்கே விளங்கப்பண்ணினார்?

41. இப்போது , அவர்... முதலாவது , அவர் பெயர் என்ன? நம் பெயர் வைக்க அவர் தமது நாமத்தை விளங்கப்பண்ணின இடத்தை கண்டுபிடிக்கும் முன் அவருடைய பெயரைக் கண்டு பிடிக்கவேண்டும். அவருக்குப் பல பட்டப் பெயர்கள் இருந்தன . அழைக்கப்பட்டார்-பிதா என்று அழைக்கப்பட்டார். இது ஒரு பட்டப் பெயர். அவர் குமாரன் என்று அழைக்கப்பட்டார். இதுவும் ஒரு பட்டப்பெயரே. அவர் பரிசுத்த ஆவி என்று அழைக்கப் பட்டார். இதுவும் ஒரு பட்டப்பெயரே. சாரோனின் ரோஜா

என்றழைக்கப்பட்டார். இதுவும் ஒரு பட்டப்பெயரே பள்ளத் தாக்குகளின் லீலி புஷ்பம் - இதுவும் ஒரு பட்டப்பெயரே. விடி வெள்ளி நட்சத்திரம், யேகோவா - ஜைரே, யேகோவா - ரேபா ஆக ஏழும் வித்தியாசமான மீட்கும் நாமங்களே - ஆனாலும் இவைக ளெல்லாம் பட்டப்பெயர்களே! இவைகளிலொன்றும் அவருடைய உண்மையான நாமமல்ல. ஆனால் அவருக்கு ஒரு நாமமுண்டு.

42. அவர் மோசேயை சந்தித்தபோது அவருக்கு ஒரு நாமம் இருந்ததில்லை. அவனிடம் அவர், ''இருக்கிறவராக இருக்கிறேன்'' என்றார். இயேசுவை நாம் எபிரேயர் 6-ம் அதிகாரத்தில் (மன் னிக்கவும்) யோவான் 8-ம் அதிகாரத்தில் பார்க்கும்போது அவர் '' இருக்கிறவராக இருக்கிறேன்'' என்கிறார்.

அவர்கள் அவரிடம், ''ஏன், உனக்குத் தான் ஐம்பது வயதாகவில்லை, ஆபிரகாமைக் கண்டேன் என்று சொல்வதெப் படி'' என்றார்கள்.

43. அதற்கு அவர், ''ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன் னமே நான் இருக்கிறேன்'' என்றார். எரிகிற புதரிலிருந்தவரும் நான் இருக்கிறேன் என்பவரே. அதாவது மோசேயின் நாட்க ளில் அந்த அக்கினி ஸ்தம்பத்தில் இருந்தவரும் இருக்கிறவராக இருக்கிறேன்'' என்பவரே .

44. இப்பவும் இயேசு கிறிஸ்து' 'நான் என் பிதாவின் நாமத் தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை'' என்று சொன்னார். அப்படியானால், இயேசு என்பது பிதாவின் பெயர். இதில் சந்தேகமில்லை . பிதாவின் நாமம் இயே சுவே. ஏனென்றால் இயேசு, ''நான் என் பிதாவின் நாமத்தினாலே வந் துள்ளேன், என் பிதாவின் நாமமே எனக்கு இடப்பட்டு இருக் கிறது, ஆனால் நீங்களோ என்னை ஏற்றுக்கொள்ளவில்லை'' என் றார். அப்படியானால் அவருடைய பெயர் இயேசுவாயிருந்தது. காபிரியேல் அவரை இயேசு என்று அழைத்தான். தீர்க்கத்தரிசி கள் அவரை இயேசு என்று அழைத்தார்கள். அவர் முற்றிலும் இயேசுவாக இருந்தார் அவர் பிறக்கும் முன் பரிசுத்தத் தீர்க்கத்தரிசிகள் அவரை இம்மானுவேல் என்றார்கள். அதற்கு

"கர்த்தர் நம்மோடு'' என்று பொருள். உலகத்தின் பாவங்களைத் தீர்க் கத் தேவன் மாமிசத்திலே வெளிப்பட்டார். அப்படிச் செய்வதில் அவருக்கு இயேசு என்ற நாமம் வைக்கப்பட்டது. ஆக, இயேசு என்பது தான் அவருடைய பெயர். அவருடையப் பெயர் ஒரு மனிதனில் விளங்கினது. சபையில் இல்லை . ஸ்தாபனத்தில் இல்லை. பிரமாணத்தில் இல்லை. ஆனால் மனிதனில் விளங்கினது. அவர் தமது நாமத்தை இயேசு கிறிஸ்துவில் விளங்கப்பண்ணினார். .

45. அவரே தேவனை ஆராதிக்கும் ஸ்தானமானார் என்பதை கண்டுபிடிக்கிறோம். அங்கே தான் நீங்கள் அவரை ஆராதிக்க முடி யும். அவர் பிறப்பதற்கு முன்பே அவர் நா ம ம் இயேசுவாக இருந்தது. அவருக்கு இயேசு என்று பெயரிடு என்று தேவ தூதனாகிய காபிரியேல் அவருடையத் தாயாருக்குச் சொன்ன முக்கி யமான நாமம் அது அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார்.

46. இதோ, நாம் அதைக் கண்டுபிடித்தோம். அவர் மாத்திரமே அந்த ஸ்தானம். அந்த பெயர் அவர் ஒரு வருக்கே வைக் கப்பட்டது. தேவன் தெரிந்தெடுத்த ஆராதனை ஸ்தானம். தே வனுடைய ஸ்தலம் - அவரே தெரிந்தெடுத்தார்- மனிதனை சந்திக்கவேண்டி தேவன் தெரிந்தெடுத்த ஸ்தானம் சபையல்ல, ஸ்தா பனமல்ல, பிரமாண மல்ல, கிறிஸ்துவிலே இருக்கிறது. அந்த ஸ்தலத்தில் மாத்திரமே தேவன் மனிதனைச் சந்திக்கிறார்; நீங்கள் தேவனை கிறிஸ்துவில் மாத்திரமே ஆராதிக்கக்கூடும். அந்த ஸ்தலமே. நீ மெத்தடிஸ்ட்டாகவோ, பேப்டிஸ்ட்டாகவோ, கத்தோலிக்க னாகவோ, ப்ராட்டஸ்டன்ட் அங்கத்தினனாகவோ அல்லது வே றென்னவாகவொ இருப்பதைப்பற்றி அக்கறையில்லை- நீ தேவனை சரியானபடி. ஆராதிக்க ஒரே ஒரு ஸ்தானமுண்டு, அது கிறிஸ் துவிலே உள்ளது. ரோமர் 8:1ல், ''ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவி யின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை'' என்றி ருக்கிறது. அது தான் சுவிசேஷம்.

47. பிரமாணங்களைக் குறித்து நாம் வித்தியாசப்பட்டு இருக் கலாம்; மனிதத் தத்துவ சாஸ்திரங்களில் நாம் வித்தியாசப்பட்டு இருக்கலாம். மெத்தடிஸ்ட்டு தேவாலயத்துக்குப் போக நீ ஒரு மெத்தடிஸ்ட்டாக இருக்கவேண்டும். பே ப் டி ஸ் ட் சபைக்குச் செல்ல ஒரு போஸ்ட்டாகவும், மாதாகோவிலுக்குச் செல்ல நீ ஒரு கத்தோலிக்கனாகவும் இருத்தல் அவசியம். ஆனால் நீ கிறிஸ் துவுக்குள் ஞனஸ்நானம் பெற்று அவருடைய சரீரத்தின் ஒரு அங் கமானால், வித்தியாசம் இல்லாமற்போகிறது. பிரிக்கும் நடுச்சு "வர் உடைந்து வி ழ, நீ சுயாதீனனாகிறாய் . எப்படி யெனில், நீ இயேசு கிறிஸ்துவில் இருக்கிறாய். நீ இயேசு கிறிஸ்து விலிருந்தால், ஆவியிலும் உண் மையி லும் தேவனைத்தொழுதுக்கொள்கிறாய். இயேசு கிறிஸ்துவில் நீ அவரை ஆரா திக் கிறது தேவன் வகுத்த திட்டமாகும்.

48 . தேவன் எங்கள் நடுவில் தான் சந்திக்கிறார் என்று எந்த சபை ஸ்தாபனமும் கூறமுடியாது. யாரும் கூறமுடியாது அப்படி சாதிக்க உங்களுக்கு எவ்வளவு தைரியம்! அப்படிக் கூறுவது அந்தி கிறிஸ்துவின் ஆவியாகும். இந்த ஆவி கிறிஸ்துவிலிருந்து உங்களைப் பிரித்தெடுக்கிறது. அவரிலிருந்து பிரித்து விடுகிறது. நீங்கள் அப்படி சாதிக்க முடியாது. கிறிஸ்து என்னும் ஓரே ஸ்தானத் திலே தேவன் தம்மை ஆராதிக்கிறவர்களைச் சந்திக்கிறார்.

49. இன்று எங்களைச் சேர்ந்திருக்கும் சபையங்கத்தினரே சாட்சிகள் என்கிறார்கள் அவர்கள் ....பல நாட்களுக்குமுன், ஒருவன் என்னை ட்டக்ஸன் நாட்டின் ப்யூமாண்ட் நகரத்திலே சந்தித்து, • திரு. பிரென்காம் அவர்களே, உம் முடையப் பெயர் எங்கள் சபை புத்தகத்தில் இல்லையானால், நீர் பரலோகத்திற்குச் செல்ல போவதில்லை'' என்றான். உங்களால் அதை நினைத்துப் பார்க்க முடிகிறதா? அப்பேர்பட்டதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்! நீங்கள் ஒரு ஸ்தாபனத்தின் அங்கத்தினராய் இருந்தாலொழிய பரலோ கத்துக்குச் செல்லமாட்டீர்கள் என்றார்கள் . அது தவறு! அதை விசுவாசிக்கிறவன் அந்திகிறிஸ் தாவான், 'நீங்கள் அதைப் போல் ஆவியை நம்பினால் இழுக்கப்படுவீர்கள்'' என்றுதான் நான் சொல்வேன். இது ஒரு நல்ல அடையாளம். இது உன்னை தேவன்

தெரிந்தெடுத்த இடத்திலிருந்து பிரித்துவிடுகிறது தேவன் தமது நாமத்தை எந்த சபையிலும் விளங்கப்பண்ணவில்லை. அவர் தமது நாமத்தைத் தம்முடைய குமாரனான இயேசு கிறிஸ்துவில் இட் டார். அப்போது அவரும் அவருடைய குமார னும் ஒன்றானார்கள். அதுவே சரியான ஆராதனை ஸ்தானமாகும்.... வேறெந்தக் கன்மலை யுமில்லை, வேறெந்த அஸ்திபாரமும் போடப்படவில்லை. கிறிஸ்து என்னும் கன் மலைமேல் நான் நிற்கிறேன், மற்றதெல்லாம் அடி புகும் மணலே'' சபை ஸ்தாபனங்களெல்லாம் நொறுக்கப்பட்டு விழும், ஜாதிகள் இல்லாமற்போகும், ஆனால் அவரோ என்றென் றைக்கும் இருப்பார் ஒருவன் தேவனை ஆராதனை செய்து அவர் அவனுக்குப் பதில் அளிக்கும் ஸ்தானம் இயேசு கிறிஸ்துவிலேயல்" லாமல் வேறே இடத்தில் இல்லை. அந்த ஸ்தலமே, அந்த ஸ்தலத் திலே மாத்திரம் தேவன் தமது நாமத்தை விளங்கப்பண்ணினார். அந்த ஸ்தலத்தில் மாத்திரமே அவர் சந்திப்பார். அந்த ஸ்தலத் திலே மாத்திரம் ஆராதனை செய்ய முடியும். வேறெதை நீ விசு வாசித்தாலும், நீ மரிப்பாய்.

50. கவனி, எல்லா ஏழு யூதப் பண்டிகைகளும் ஒரே இடத் தில் வைக்கப்பட்டன. அவர்கள் எப்போதும், மெத்தடிஸ்ட்டு சபையாருக்கு இங்கேயும், பேப்டிஸ்ட்டு சபையாருக்கு அங்கேயும் பிரஸ் பிடீரியன் சபையாருக்கு வேறெங்கேயும் , கத்தோலிக்கருக்கு பின்பக்கம் ஒரு இடத்திலும், ப்ராட்டஸ்ட்டண்ட் சபையாருக்கு வேறொரு இடமாகப் பல இடங்களில் வைக்கவில்லை எல்லா ஏழு பண்டிகைகளும் ஓரே இடத்தில் ஆசரிக்கப்பட்டன.

51. அது இங்கே ஒரு அழகான மாதிரியாக இருக்கிறது. சிறிது முன்பு நாம் ஏழு திருச்சபைக் காலத்தைப் பார்த்தோம், எல்லா ஏழு சபைகளையும் தேவன் தமது வார்த்தையிலே வைத்தி ருக்கக் கண்டோம். ஒவ்வொரு சபைக் கா லமும் ஒரு பாக வேத வார்த்தையைக்கொண்டு வந்தது . அவைகள் வார்த்தையைக் கொண்டுவரும் போதெல்லாம் வெளிச்சத்தைக் கண்டன .... அது முதல் சபையானது இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொ டுத்தது போல இருக்கிறது. அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் வெளிப்பாட்டைக் கொண்டு ஒரு சபை ஸ்தாபனத்தை

உண்டாக்கினார்கள். அது அங்கேயே மரித்தது . பின்னர் தேவன் அங்கே இருந்து புறப்பட்டு வேறே மனிதனில் தங்கினார். அவர் அவர் களின் பிரமாணங்களிலும் கொள்கைகளிலும் தங்குவதில்லை. அவருக்கு அவர்களுடன் செய்யவேண்டியது ஒன்றுமில்லை தேவன் நெறி தவறுபவர் அல்ல! அவர் வார்த்தைப் பரிசுத்தமான து. கல்ப் பற்றது. கிறிஸ்து தேவனின் ஆராதனைக்கு நடுமையானவர். அவர் தேவன்,

52. இந்த இடத்திலேதான் எல்லா ஏழு பண்டிகைகளும் கொண்டாடப்படவேண்டும். வேறெந்த இடத்திலும் பண்டிகை யை ஆசரிக்க முடியாது. ஆனால் அந்த ஏழு - ஒரு வருடத்தில் வரும் ஏழு பண்டிகைகளும் ஒரே இடத்தில் ஆசரிக்கப்பட வேண் டும். ஆனபடியினாலேதான் ஏழு சபைக்காலங்களும் ஒரே ஒரு இடத்திலிருந்து எழும்பின. கிறிஸ்துவே ஏழு சபைக்காலங்களில் லும் பேசினதை அது குறிக்கிறது. அது சரியான உண்மை . ஏழு சபைக்காலங்களின் மாதிரி. ஆனால் அவர்கள் அதிலிருந்து சபை ஸ் தா பனங்களை உண்டாக்கினார்கள்.

53. இங்கே நாம் இப்போது மற்றொரு மாதிரியைக் காண் போமாக. அது பஸ்காவின் மாதிரி - அது இயேசுவின் சாயலாக இருந்தது. இங்கே மரணத்தால் இந்தப் பலியைப் பார்க்கிறோம். இரத்த பலியே கிறிஸ்துவின் சாயலாக இருந்தது. ஒரு சபை ஸ்தாபனம் இரத்தஞ் சிந்தக்கூடுமா? ஒரு சபையோ அல்லது ஒரு ஸ்தாபனமோ இரத்தம் சிந்துவதை உங்களால் நினைத்துப் பார்க் க முடிகிறதா? இல்லவே இல்லை. உயிரிலிருந்து தான் இரத்தம் வழிய முடியும்..... இயேசு இங்கே ஆட்டுக்குட்டியாகக் காட்சி அளிக் கிறார். ஆட்டுக்குட்டி கிறிஸ்துவின் மாதிரியாகவும் சாயலாகவும் இருந்தது. ஏனென்றால் அவர் தேவ ஆட்டுக்குட்டியாக இருந் தார் . யோவான் அறிமுகப்படுத்தின தற்கொப்ப அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்தார்.

54. யாத்திராகமத்தின் 12-ம் அதிகாரத்தில் இயேசுவை வரக்காண்கிறோம். கவனி. அந்த ஸ்தலத்தில் மாத்திரமே மரண மில்லை. மரணம் ஒரு தேசத்தில் உலாவுவதற்குமுன் அங்கே ஒரு இடம் தயார் செய்யப்பட்டது. அந்த இடத்தின்கீழ் இருந்த எல்லாம் மாண்டுபோயின! ஒரே ஒரு இடம்! அது ஒரு வீடு என்று

குறிப்பிடப்பட வில்லை. ஆனால் ஒரு ஸ்தலம் உண்டு. அந்த ஸ்தலத்தில் மாத்திரமே ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. ஆட்டுக் குட்டியின் இரத்தம் இருந்த இடத்தில் தேவதூதன் நுழையவில்லை ஏனென்றால், அந்த இடத்தில் மாத்திரம் தேவன் தமது வார்த் தையை வைத்திருந்தார். ஆட்டுக்குட்டி என்று அவருக்கு ஆதியி லே பெயர் வைக்கப்பட்டு இருந்தது. கவனி. அந்த ஒரு இடத் தில் மாத்திரம் மரணம் நுழைய வில்லை .

55. ஆக, இன்றும் அதே மாதிரி தான் இருக்கிற து. ஆத்மீக மரணம் நுழைய முடியாத ஒரே ஒரு இடமுண்டு. அது வார்த்தையே. மரணம் வார்த்தையை அடிக்க முடியாது. ஏனென்றால் அது ஜீவ னுள்ள தேவனுடைய வார்த்தை. ஆனால் நீ வார்த்தையுடன் பிரமாணங்களைக் கூட்டும்போது . வார்த்தை வெளியே நகர்ந்து விடுகிறது. எண்ணெயிலிருந்துத் தண்ணீர் எப்படி பிரிந்துபோகி றதோ அப்படிப் பிரிந்துவிடுகிறது. அவைகளை உன்னால் கலக்க முடியாது . ஆகவே நீங்கள் பாருங்கள் : ஸ்தாபன சபையிலே பிரமாணம் நுழையும்போது, அவர்கள் பிரமாணத்தை நம்புகி றார்கள். அப்போது அங்கே வார்த்தை மரித்து, வேறொருவரில் உயிர்ப்பிக்கப்படுகிறது. சமயத்தோடு, அது நீதிமானாக்கப்படுவ தில் துவங்கி, பரிசுத்தப்படுதல், பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நா னத்தில் திகழ்ந்து , அது தானியத்தைப் போய்ச் சேருகிறது. தே வன் நடக்கும் பாதையை உங்களால் கண்டுகொள்ள முடிகிறதா? தமது நாமத்தை அதே வழியாய் எல்லா சமயத்திலும் கொண்டு வருவது ஏனென்றால் அவர் வார்த்தையாயிருக்கிறார்.

56. கவனி. அது மரிக்காது. ஜீவ வார்த்தை மரிக்கா து. எவ்வளவு சரியாக இருக்கிறது பார். எகிப்து தேசத்தில் உயர்ந்த லத்தார், கற்றறிந்தவர்கள், அவர்களுடையத் தேசம், பெரியக் கூட்டங்கள், அவர்களின் பார்வோன் இராஜாக்கள், அத்தேச கோவில் பூஜாரிகள் முதலியவற்றை சங்காரம் செய்வதிலிருந்து தேவதூதர்கள் தடுக்கப்படவில்லை. தூதர்கள் எந்தக் கூட்டத் தையும், எந்த இடத்தையும், எவரையும் சங்காரம் செய்ய அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது . ஆனால் எங்கே ஆட்டுக் குட்டியின் இரத்தம் இருந்ததோ அங்கே அவர்கள்

சங்கரிக்கவில் லை. தேவன் கொடுத்த இடத்தில் மரணம் சங்கரிக்கமுடியாது. அந்த இடம் ஆட்டுக் குட்டியிலே உள்ளது.

57. கவனி. தூதன் இஸ்ரவேலையோ அல்லது எபிரேய ஆசாரியர்களையோ, அவர்களின் ஸ்தாபனங்களை யோ சங்கரிக்கத் தடை செய்யப்படவில்லை. எல்லாரும் தேவன் தெரிந்தெடுத்த இடத்தில் இருக்க வேண்டும். இல்லையானால் மரணம் அவர்களை அடிக்கும்!

58. சபையே, நீ எங்கே இருக்கிறாய் என்பதும், எதைச் சார்ந்திருக்கிறாய் என்பதும் எனக்கு ஒரு வித்தியாசத்தையும் உண் டாக்குவதில்லை . ஆனால் ஒரு காரியத்தை நீ அறியவேண்டும். நீ கிறிஸ்துவில் இருந்தே தீர வேண்டும். இல்லையானால் சாவாய். அவ ருக்கு வெளியே நீ வாழ முடியாது. சட்டடம் எனப்படும்வரை உன் னுடைய ஆலயம் சரிதான். மனிதரிடம் இருக்கும் உன் சகவாசம் சரிதான் ஆனால் நீ அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் இயேசு கிறிஸ்து வின் வார்த்தையையும் மறுக்கிறாய் நீ அப்படி செய்கிற மாத்திரத்திலே மரிக்கிறாய். அது தேவன் தெரிந்தெடுத்த ஸ்தானம். சரியாக அங்கேதான அவர்" ம் இருக்கிறது. தம் நாமம் விளங்க அவர் தெரிந்தெடுத்த ஸ்தானம் ஆலயத்தில் அல்லஅது குமாரனில் இருக்கிறது. இயேசு கிறிஸ் துவிலே இருக்கிறது

59. கவனி. பாதுகாப்பு அவர் தெரிந்தெடுத்த ஸ்தலத்தில் மாத்திரமுள்ளது. அது ஆட்டுக்குட்டி. அது ஆட்டுக்குட்டியின் நாமம்.

60. கவனி. அது ஆண் ஆட்டுக்குட்டி-அது அவர், அது அவள் அல்ல ஆலயமல்ல (ஆலயத்தை அவள் என்றழைக்கிறோம்) ஆனால் அவர் நாமம்; அவள் நாமம் அல்ல. அவர் சந்திக்கும் இடம் அவள் நாமமல்ல-அவர் நாமம். அவர் ஆட்டுக்குட்டி!

61. இப்போது நாம், ' 'சபை, பெரிய வல்லமையான சபை. அவள் இதைச் செய்தாள், அவள் அதைச் செய்தாள்'' என்கிறோம். * 'அவள் புயல் காற்றைத் தராசில் நிறுத்தினாள். நாங்கள் ஜனத் தொகையிலிருந்து எடுக்கப்பட்டு இருக்கிறோம். நாங்கள் ஒரு பெரிய ஜனமாயிருக்கிறோம். ஒரு வல்லமையானச் சபையாக இருக்கிறோம். சபையானவள் ஒரு பெரிய கூட்டமாக

இருக்கிறாள்' என்றும் கூறுகின்றோம். ஆனால் தேவன் ஒருபோதும் ஒரு அவளைப் பற்றிப் பேசவில்லை அவர் அவர் என்றார். அவர் என்பது சந்திக் குமிடம். ஆட்டுக்குட்டி-- சபையல்ல. அவளின் நாமமல்லஆனால் அவருடைய நாமம்! அவர் அவளுடைய நாமத்தை எங்கே யும் விளங்கப்பண்ண வில்லை . அவர் தமது நாமத்தை விளங்கப் பண்ணினார். அவரிலே விளங்குகிறது! அதனாலேதான் நாம் செய் வதிலும், நமது வார்த்தையிலும், கிரியையிலும், எல்லாவற்றிலும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இருக்கவேண்டும். நாம் ஜெபிப் போமானால், இயேசுவின் நாமத்திலே ஜெபிக்கவேண்டும். நாம் வேண்டுதல் செய்தால், அதுவும் இயேசுவின் நாமத்திலே செய்ய வேண்டும். நடப்பதும் இயேசுவின் நாமத்திலிருக்கவேண்டும். நாம் பேசினால், அதுவும் இயேசுவின் நாமத்திலேயே இருத்தல் வேண்டும். நாம் ஞானஸ்நானம் கொடுத்தால், அதுவும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இருக்கவேண்டும். வார்த்தையினாலும் கிரியையினாலும் எல்லாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே செய் யப்பட வேண்டும்.

62. ஒரு தடவை நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில், ஒருவர் என்னிடம், ''சகோதரன் பிரென்காம், என் மனைவி, நானல்ல அவள், அவள் அவளுடையப் பெயர் பலானது. (இதைக் கூறு வது ஒரு ஊழியன். ஒருவேளை இந்தக் கூட்டத்தில் உட்கார்ந்துக் கொண்டிருப்பார்.) என் மனைவி என் பெயர் சூட்டப்பட்டவளாக இருக்கிறாள். (ஜோன்ஸ் என்றப் பெயரை உபயோகிக்கிறேன். அவள் பெயர் ஜோன்ஸ் அல்ல) அவள் காலையில் எழுந்து துடப்பத்தை எடுத்து, 'இதோ, நான் இந்தத் தரையை ஜோன்ஸ் என் ற பெயரால் சுத்தம் செய்கிறேன். இந்தப் பாத்திரங்களை ஜோன் ஸின் பெயரில் துலங்குகிறேன். துணிகளுக்கு ஜோன்ஸின் பெய ரால் வட்டம் போட்டுத் தைக்கிறேன்' என்று கூறுவது அவசிய மில்லை. எந்த பெயரையும் எடுக்கவேண்டிய அவசியம் இல்லையே'' என்றார்.

நான் அதற்கு, ''அவள் அப்படிச் செய்கிறாள் என்று நம்புகிறேன்'' என்றேன். சரி ..

அதற்கு அவர், "சரி, ஏன்-அவள் எதைச் செய்தாலும் ஜோன்ஸின் நாமத்திலே செய்யவேண்டியது --அவள் ஆரம்பத்தில் அப்படிச் செய்யவேண்டியது அவசியமில்லை'' என்றார்.

63. நான் அதற்கு, ''ஆனால் நீ தெருவில் நடந்து போய் அவள் கையைப் பிடித்து 'வா, ஜோன்ஸ்' என்று சொல்லி அவளை இழுத்துக்கொண்டு வரவில்லயே அவன் முதலாவது ஒரு முறை மையின்படி, தி ரு ம ண முறைமையின்படி, ஜோன்ஸ் ஆனாள். அவள் அப்படி வரவில்லை யானால் நீ விபசாரத்தில் வாழ்ந்து வந்தாய். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயல்லாமல் வேறெந்த ஞானஸ்நானமும் பெற்றிருந்தால் அது விபச்சார ஞானஸ்நான மாகும். அது -அது வேதாகமத்திலில்லாத ஞானஸ்நான மாகும்'' என்றேன். ஆக, நீ செய்வதை எல்லாம் வார்த்தையிலும் கிரி யையிலும் இயேசுவின் நாமத்தினா◌ால செய். அதற்குப் பிறகு, நீ செய்வது .. ஆனால் முதலாவது அவர் நாமத்துக்குள் பிரவேசிக்க . வேண்டும்.

64. இன்றிரவு, இங்கே, இந்தக் கட்டிடத்திலே பல நேர்த் தியான ஸ்திரீகள் உள்ளனர். நேர்த்தியானவர்கள், கருத்துடை யவர்கள், ஆனால் இங்கே ஒரு திருமதி வில்லியம் பிரென் காம் இருக்கிறாள். அவள் ஒருவளே என்னுடன் வீட்டுக்குச் செல்கிறாள். அவள் தான் என் மனைவி.

65. இந்த உலகத்திலே பல நேர்த்தியானவர்கள் இருக்கிறார் கள் . நேர்த்தியான சபைகள் . ஆனால் இங்கே ஒரு மிஸ் (Miss) இயேசு கிறிஸ்து இருக்கிறாள். அவளுக்காகத்தான் அவர் வருகி றார். அங்கே தான் அவர் நாமம் உள்ளது . அங்கே தான் அவரு டைய ஆரா தனை இருக்கிறது . அவளிலே. அவ ளில் மாத்திரம்,

66. ஆக, அதனால் தான் நாம்- நாம் எல்லாவற்றையும் வார்த்தையிலும் சிரியையிலும் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே செய்கிறோம். இரட்சிப்புக்கு வானத்தின் கீழ் வேறொரு நாமம் அருளப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் நாமமே அருளப்பட்டி ருக்கிறது . அப்போஸ்தலர் 4-ம் அதிகாரம் அதைக் கூறுகிறது: ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை'' நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின்

கீழெங்கும், மனிதர்களுக் குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை' '-- இயேசு கிறிஸ்து என்ற நாமத்திலே மாத்திரம் ஆமேன்! உங்களுக்கு விளங்குகிறது என்று நம்புகின் றேன்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஒவ்வொரு உயரவானமும் அழைக்கப்படுகிறது வேதாகமம் கூறுகிறபடி பரலோகத் தில் இருக்கிற எல்லா குடும்பமும் இயேசு என்று பெயரிடப்பட்டு இருக்கிறது. பூலோகத்துக் குடும்பமும் இயேசு என்று பெயரிடப் பட்டு இருக்கிறது. ஆக, அது தேவன் தெரிந்தெடுத்த நாமம். அங்கே அவர் தமது நாமத்தை விளங்கப்பண்ணினார். அது அவுருடைய ஆராதனை ஸ்தானம் - அது இயேசு கிறிஸ்துவிலே உள் ளது.

67. ஆக, அது அப்படி இருக்கிறதென்று நாம் அறிகிறோம். அவரிலேயல்லாமல் ஆராதிக்க வேறிடமில்லை. நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே . அவரு டைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில் லை. மீட்புக்கென்று, அவருடைய நாமம் தேவனுடைய நாமமா யிருக்கிறது. யெகோவா-ஜைரே, யெகோவா --ரே பா என்றும் அவருக்கு நாமம் உண்டு. அதாவது யெகோ வா-ஜைரே என்றால் கர்த்தர் உன்னுடைய எல்லா பாவங்களையும் மன்னிக்கிறவர் என் றும், யெகோவா --ரேபா என்றால் கர்த்தர் உன்னுடைய எல்லா வியாதிகளையும் குண மா க்கு கிறவர் என் று ம் பொருள்படுகிறது . அவருக்குப் பல பட்டப்பெயர்கள் உள்ளன. ஆனால் மீட்புக்கென்று அவருக்கு ஒரே நாமம் உண்டு அது பூலோசத்தாருடையது அது இயேசு என்னும் நாமமே. அது தாம் விளங்கப்பண்ண தெரிந் தெடுத்த நாமம் ..

68. அவர் எங்கே விளங்கப்பண்ணினார்? கிறிஸ்துவிலே விளங்கப் பண்ணினார். வேறெந்த ஆலயங்களிலும், பிரமாணங் களிலும், பட்டப்பெயர்களிலும் நம்பிக்கை வைப்பது மரணத் துக்கேதுவாகும். மெத்தடிஸ்ட் சபை உன்னைப் பரலோகத்துக்கு எடுத்துச் செல்லும் என்று நீ நினைத்தால், நீ வழித் தவறினாய். நீ பெந்தெகோஸ்தே சபையில் விசுவாசித்து அது உன்னைப் பரலே T கத்துக்குக் கொண்டு போகும் என்று நினைத்தால், நீ வழி தவறி

னாய். பேப்டிஸ்ட், லுத் தரன், ப்ரஸ் பிடீரியன், கத்தோலிக்க, அல்லது வேறெந்த சபையும், அல்லது அவர் களுடையப் பட்டப்பெயர் களையும் , அவர்களுடையப் பிரமாணங்களையும் நம்பி, இவைகள் உன்னை பரலோகத்துக்கு எடுத்துச் செல்லும் என்று நினைத்தால், நீ வழி தவறினாய். முதலாவது நீ ஆராதனை ஸ்தலத்துக்கு வர வேண்டும். ஆமேன்! அவர் தமது நாமம் விளங்கும்படி தெரிந் தெடுத்த ஸ்தலத்தில் மாத்திரமே தம்மை ஆராதிக்கிறவர்களைச் சந்திக்கிறார். வேறெதில் விசுவாசித்தாலும் நீ மரிப்பாய்!

69. அவரும்.... இங்கே இயேசுவின் மற்றொரு சாயல், வேத வாக்கியத்தைக் குறித்து வைத்திருக்கிறேன். அவரும், அவர் .... இங்கே முன் குறித்த சாயலாய் இருக்கிறார். அவர் கறைதிரை யற்று இருக்க வேண்டும்... அவர் தமது நாமத்தை விளங்கப்பண் ணும் இடமாகிய ஆட்டுக்குட்டி கறையற்று இருக்க வேண்டும். இப்போது, எந்த சபை ஸ்தாபனத்தை அல்லது எந்த ஓழுங்கை நீ குறித்துக்காட்ட முடியும்? எந்த சபை? கத்தோலிக்கச் சபையா? ப்ராட்டஸ்ட்டண்ட் சபையா? யூத சபையா? வேறெதும் சபை இருக்கிறதா? எந்த ஒழுங்கு? எந்த சபை ஸ்தாபானம்? இவைகளில் எது கறையற்றது என்று காட்ட முடியும்? அவைகளெல்லாம் புறக்கணிக்கப்பட்டும், மறுதலிக்கப்பட்டும் இருக்கின்றன . ஆனால் ஒரு இடமுண்டு . அல்லேலூயா! அந்த இடம் இயேசு கிறிஸ்துவி லிருக்கிறது. அவரில் ஒரு கறையுமில்லை. அவரில் ஒரு பிசகுமில்லை. உன்னால் குற்றம் சாட்ட முடியாது . இந்த ஜனங்களெல்லாரும் குற்றஞ்சாட்ட முயற்சிக்கிறார்கள். அவர்களின் சபை கறையற்றது என்கிறார்கள் . அது ஒழுக்கங்கெட்டது. வார்த்தையை அவமாக்குகிறவர்கள், சிற்றின்பக்காரரர். பாதி- மரித்துப்போன வர்கள் பிரமாணஞ் செய்கிற லவோதிக்கேயர்---இவர்கள் கூறுவது சத்தியமல்ல அவருடைய விரோதியாகிய பிலாத்துவும் கூட, ''இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை'' என்றான். நீங்களும் அவர் மேல் குற்றஞ்சாட்ட முடியாது.

70. அவர் தம் நாளின் ஆசாரியரைக் கண்டு' 'என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்

கூடும்? நான் பாவி என்று யார் நிரூபிக்க முடியும்?'' என்றார், நான் ஒருகாலும் தப்பு செய்யவில்லை என்று கூறும் சபை எது என்று எனக்குச் சொல். வெளிப்படையாக, எல்லா காலக் குறிப் பையும் காணும்போது ஒரு சபையும்கூட கொலை செய்யாமலில் லை. அப்படி இருந்தும் அவர்கள் தங்களை ...இல்லை . ஸ்தாபனங் களும் பிரமாணங்களும் தேவன் சந்திக்கும் ஸ்தலம் அல்ல .

71. என் நண்பர்களே உங்களு டைய மனங்களை புண்படுத்த எனக்குப் பிரிய மில்லை. ஆனால் நான் ஒரு செய்திக்குப் பொறுப்புள் ளவனாக இருக்கிறேன். அந்தச் செய்தி என்ன வென்றால், இந்தக் குழப்பத்திலிருந்து வெளியே வாருங்கள் !'' நான் உங்களை வெளி யே வா எ ன் று அழைப்பேனானால், உங்களை எங்கே கொண்டுபோக போகிறேன்? பிரென் காமின சபைக்கா? அது மற்றவர்கள் செய்யும் தப்பிதங்களில் ஒன்றாயிருக்கும். உங்களை நான் கொண்டுபோகும் ஒ ந இடமுண்டு. அங்கே நீங்கள் மரணத்திலிருந்து பாதுகாக்கப்படுவீர்கள் அது தேவனே ஆராதனைக்குத்தெரிந்தெடுத்த ஸ்தலமாகிய இயேசு கிறிஸ்துவ லே இருக்கிறது. இன்று இரவு உங்க ளுக் கு நான், அந்த ஸ்தலத்தை அறிமுகப்படுத்துகிறேன். அங்கே தேவன் தமது நாமத்தை விளங்க வைத்திருக் கிறார். அங்கே வரும் ஒவ்வொ ருவரோடும் சந்திக்க வாக்களித்திருக்கிறார். அங்கே வருபவர்களு டன் அவர் விருந்து ண் டு ஆராதனைச் செய்வார். அது கிறிஸ்து விலுள்ளது எந்த ஆலயத்திலுமில்லை . சபையிலுமில்லை. கிறிஸ் து விலிருக்கிறது. அவரே தேவனுடையக் கூடாரம். இந்த இடத்தில் தானே தேவன் தமக்குள் வந்து அவரில் வாசம் பண்ணினார்: இவர் என் நேசகுமாரன், இவரில் நான் பிரியமாயிருக்சிறேன்''. அங்கே தான் தேவன் கூடாரம் அடித்தார். தமது நா மத்தைக் கொண்டு வந்தார் இயேசு கிறிஸ்துவில் வைத்து விளங்கப்பண்ணினார். இயேசுவில் தாமே கூடாரம் அடித்தார். எருசலேம் பட்டணமும், பண்டையப்பண்டிகைகளும், பண்டைய ஆலயமும் இ யே சு என்ற கூடாரத்துக்கு மாதிரியாயிருந்தன. உடன்படிக்கைப் பெட்டகத்தில் புகை பிரவேசித்துத் தங்கினதும் அங்கிருந்து

தேவனுடையச் சத்தம் வெளியே வந்தது . அவ்வண் ண் மே தேவனுடைய சத்தம் இயேசு கிறிஸ்து என்னும் கூடாரத் தில் வந்தது . அந்த இயற்கையானப் பண்டைய மாதிரி புதியதின் சாயலாயிருந்தது. கிறிஸ்துவிலே வந்ததும் அவர், ''இவர் என் நேச குமாரன். நான் இவரில் பிரியமாய் வாசம் பண்ணுகிறேன். இந்த இடத்தைத் தெரிந்தெடுத்தேன். இங்கே என் நாமத்தை விளங் - ப்பண்ணினேன் . இங்கேதான் நான் மனிதனைச் சந்தித்து இங்கே ஆராதனைச் செய்வேன்" என்றார். தேவன் அந்த ஸ்தலத் தைத் தெரிந்தெடுத்தார். எந்த ஸ்தாபனத்திலுமல்ல, ஆனால் இயேசு கிறிஸ்துவிலே, ஆமாம், ஐயா!

72. நான் கூறினபடி , அவர் கரையற்றும் இருக்கவேண்டும். எந்த சபை ஸ்தாபனமும் கறையற்றுள்ளதாகக் கூறமுடியாது . அவர்கள் கூறினால், அவர்கள் அந்திகிறிஸ்துக்கள் .

73. இப்போ து, இங்கே நாம் பார்க்கிறபடி, அவருடையச் சாயலை மறுபடியும் கவனியுங்கள். ஆட்டுக்குட்டியானது. ஆட் டுக்குட்டியான து நான் கு நாட்களுக்காக விலக்கி வைக்கப்பட வேண்டும் (இது யாத்திராகமம் 12ம் அதிகாரத்திலுள்ளது. நீங் கள் குறித்துக்கொள்ள விரும்பினால், (யாத்திராகமம் 12 :3-6;) அது தனகபலிக்குத் தகுந்ததா என்று சோதிக்கப்பட வேண்டும். அதை எடுத்து மீண்டும் மீண்டும் நான்கு நாள் மட்டும் ஆட்டுக் குட்டியில் கறைதிரை இருக்கிறதா என்றும், அதில் நோய் இருக்கி றதா என்றும் ஏதேனும் குறையிருக்கிறதா என்று ம் பரிசே 7 தனை செய்யப்பட வேண்டும். அது நான்கு நாட்களுக்கு விலக்கி வைக் கப்பட வேண்டும்.

74 இப்போது கவனி. சிலர் நான் சொல்வதில் ஏதேனும் தப்பு இருப்பதாகக் காணலாம்-ஆட்டுக்குட்டியைப் 14ம் நாள் அடித்தார்கள் என்று கூறலாம். ஆனால் அவர்கள் ஆட்டுக்குட்டி யைப் 10ம் தேதி பிடித்து மாதத்தின் 14 ம் நாள் பலி செலுத்தி னார்கள் என்பது ஞாபகம் இருக்கட்டும் ( விளங்குகிறதா?) அது நான்கு நாள் கட்டிவைக்கப்பட்டிருந்தது.

75. இப்போது தேவ நாமம் ஆட்டுக்குட்டியான இயேசு எருசலேமுக்குச் சென்று, அவர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு

உயிர்த்தெழும்வரை அவர் திரும்பிவரவே இல்லை. குற்றம் சாட்டுகிறவர்களின் மத்தியில் அவர் நான்கு நாள் நான்கு இரவு நிறுத்தப்பட்டு இருந்தார் . ஆட்டுக்குட்டியான து எவ்வண்ணம் மாதிரியாக இருந்தது பாருங்கள்! நான்கு நாள் கட்டி வைக்கப்பட்டிருந்தது. அப்போது பிலாத்து, 'இந்த மனுஷனில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை'' என்றான் .

76. அவருடைய சாயலைக் காண்போம். அவரிலிருந்த ஒரு எலும்பையும் உடைக்கக் கூடவில்லை, அவர்களால் உடைக்க முடி யவில்லை... பலியான ஆட்டுக்குட்டியின் எ லு ம் பை அவர்கள் உடைத்ததில்லை. சாயலா னது எவ்வளவு சரியாக இருக்கிறது பார்! உடைந்துபோன எலும்பையுடைய ஆட்டுக்குட்டி மறுதலிக் கப்பட்டது. கிறிஸ்துவின் கால் எலும்புகளை உடைக்கச் சம்மட் டியை ஏற்கனவே தயார் செய்திருந்தார்கள். ஆனால், ''ஏற்கன வே இறந்துவிட்டிருக்கிறார்'' என்றறிந்தார்கள். பின்னர் அவர் கள் அவருடைய விலா வை ஈட்டியால் குத்தி இரத்தமும் தண்ணீரும் வடிவதைக் கண்டார்கள்.

77. மற்றொரு பெரிய காரியத்தை இங்கே கவனி. நான் இந்தக் காரியத்தை பின்விட்டு முன்னோக்கிப் பிரசங்கம் பண்ண மாட்டேன். அவர் காணிக்கையில் மாதிரியாகக் காணப்படுகிறார்.-போ ஜன பலியாகிய காணிக்கையில் ஒரு காலத்தில் அவர்களிடம் ஒரு வேதாகமப்பள்ளி இருந்தது என்று நினைக்கிறேன். அதன் பெயர் தீர்க்கதரிசிகளின் பள்ளி என்பதாகும். அது ஒரு நல்ல பள்ளிக்கூடமாக இருந்தது. எலிசா அந்த பள்ளிக்குச்சென்றிருந்தார் என்று பார்க்கிறோம். அப்போது அவர்கள், “நாங்கள் ... '' என்றார்கள் . அவர்கள் அவரிடம், ''நீர் இங்கே இருக்கும் போது இங்குள்ள காரியங்கள் அதிக அளவில் திருத்தப்படுகிறது' என்று சொல்லி அவரைப் போகும்படி வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். ஆக, அவர்கள் அவரை போய்விடக் கேட்டுக்கொண்டார்கள். ஒருவன் கீரை பறிக்க வெளியே போய், ஒரு பேய்க் கொம்மட்டிக் கொடியைக் கண்டு, அதன் காய்களை மடி நிறைய அறுத்து வந்து, அவைகளை அரிந்து கூழ்பானையிலே போட்டான். அதைச் சாப்பிட ஒரு பெரிய கூட்டம் கூடினது. உணவு விஷமாக இருந்தது . அந்த காய் பானையில் கொதித்தது.

ஒருவன், 'ஐயோ, பானை யில் சாவு இருக்கிறது. இப்போது நாம் சாப்பிடக்கூடாது' என்றான்.

அப்போது எலிசா, 'கொஞ்சம் மாவைக் கொண்டு வா ருங்கள்' என்றான். அதை எடுத்து, அந்தப் பானையில் போட்டு, 'சாப்பிடுங்கள். பானையில் விஷம் இல்லை' என்றான். (2 இரா ஜா 4: 38-4!)

78. அந்த போஜன பலியாகிய காணிக்கை கிறிஸ்துவாக இருந்தார். அந்த ஒவ்வொரு கரடுமுரடானவையும் அப்படித் தான் சமமாக்க வேண்டியதாய் இருந்தது . ஒவ்வொரு சிறிய போஜன பதார்த்தமும் அரைக்கப்பட்டு போஜனபலியாக்கவேண்டி இருந்தது. அப்போதுதான் அவர் மீட்பர் என்பதைக் காட்ட முடி ந்தது. அவர் மரணத்தை மாற்றி தமது இரண்டு பிரமாணங் களினால் ஜீவனைக் கொண்டு வந்தார். அல்லேலூயா! மரணம் குடிக்கொண்டிருக்கும் இடத்துக்கு கிறிஸ் து வரும்போது , ஜீவன் உள்ளே வருகிறது. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறா தவர். எங்கே மரணம் இருக்கிறதோ அங்கே கிறிஸ்துவைக் கொண்டுவந் ததால் அது உயிர்ப்பிக்கப்பட்டது, அதுவே போ ஜன பலியாகிய காணிக்கை.

நாம் ஆர-தீர ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்த்தால் இந்தக் காரியங்கள் எல்லாம் ஒரு பெரிய பாடமாகத் திகழ்கின் றன .

79. இப்போது கவனி . வார்த்தையின் ஒரு சாயலும் நிறை வேறாமல் இல்லை. சாயலாயிருந்த ஒரு வார்த்தையும் ஒருபோதும் நிறைவேறாமல் இல்லை. எல்லாம் சரியான மாதிரிகளாக அமைந்துள்ளன. அவரே தேவன் தெரிந்தெடுத்த ஆராதனை ஸ்தானம். தேவனுடைய நாமம் அவருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவரே தேவன் தெரிந்தெடுத்த ஆராதனை ஸ்தானம். தேவனுடைய நாமம் அவருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர் தேவனுடைய நாமமும் வார்த்தையுமாயிருக்கிறார். அவர் மாமிச மான வார்த்தையாய் இருக்கிறார். அவர் தேவனுடையவார்த் தையும், ஆட்டுகுட்டியும், நாமமுமாயிருக்கிறார். அவர் தேவனாயி ருந்தார். அவர் அது வாகத்தான் இருந்தார்-தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஆராதனை ஸ்தானமாக இருக்கிறார்.

80. இயேசு கிறிஸ்துவேயல்லாமல் வேறெந்த ஸ்தான த்தை யும் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. நீங்கள் விரும்பும் இடங்களி லெல்லாம் அவரை ஆராதிக்க முடியாது . அவர், 'மனுஷனுடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து , வீணாய் எனக்கு ஆரா தனை செய்கிறார்கள்' என்றார். இன்று நர் மிடம் பிரமாணங்க ளும், கொள்கைகளும், 'இது தான் வழி' என்று போதிக்கும் போ தனை களும், 'அதுதான் வழி' என்று போதிக்கும் பிரதிகளும் உள்ளன. ஆனால் இயேசுவோ, 'நானே வழியும் சத்தியமும் ஜீவனு மாய் இருக்கிறேன். என்னாலேயல்ல மேல் ஒருவனும் பிதாவினி டத்தில் வரான்' என்றார். வேறுவிதமாய்ச் சொல்லப்போனால், 'நானே ஆடுகளுக்கு வாசல், வெளியே இருக்கிறவர்கள் கொள்ளைக் காரர்கள்' என்றார் எனலாம். அவரே வழி அவர் வாசலாய் இருக் கிறார். அவரே வழி, சத்தியம், ஜீவன். நாம் பிரவேசிக்க .அவரே உட்செல்லும் வழி. ஒரே இடம். ஒரே ஆராதனை ஸ்தானம். ஒரே நாமம். எல்லாம் இயேசுவுடனே கட்டப்பட்டு இருக்கிறது . எல்லா பழைய ஏற்பாடும் அவருடன் கட்டப்பட்டு இருக்கிறது. புதிய ஏற்பாடும் அவருடன் கட்டப்பட்டு இருக்கிறது. இன்று சபையோ கற்பனை என்னும் வார்த்தையால் கட்டப்பட்டு இருக் கிறது. அவர் தெரிந்தெடுத்த ஆரா தனை ஸ்தானமாகிய இயேசு கிறிஸ்துவிலேயல்லாமல் தேவன் மனிதனை வேறெந்த இடத்தி லோ, நாமத்திலோ) சந்திக்க வாக்களிக்கவில்லை.

81. கவனி. அவர் தெரிந்தெடுத்த இந்த இடத்தில் மாத்தி ரமே தேவன் தம்மை ஆராதிக்கிறவர்களைச் சந்திக்க வாக்களித் தார். நாம் தெரிந்தெடுத்த இடமல்ல , நாம் நினைத்த இடமல்ல. அவர் நினைத்த இடம், அவர் குறித்த இடம். அவர் தமது நா மத்தை விளங்கப்பண்ணின இடம் அவர் தெரிந்தெடுத்த இடம். ஆக, அவர் எதைத் தெரிந்தெடுத்தார் என்றும், அவர் நாமம் எங்கே இருக்கிறதென்றும் காண்கிறோம். அது அவரே தெரிந்தெ டுத்த ஸ்தானம்.

82. நாம் இப்போது அவர் தமது நாமம் விளங்கப்பண்ணின இடத்தைக் கண்டுபிடித்தோம். (அது இயேசு கிறிஸ்துவிலுள்ள து) வேறெந்த இடமு மில்லை. வே றொ ந நாமமுமில்லை இந்த விளக் கம் உங்களு க்கு விளக்கமாக இருக் கிறதா?

அப்படியானால் ஆமேன் என்று சொல்லுங்கள். (சபை “ 'ஆமேன்'' என்று பதிலளிக்கிறது -ஆசிரியர்) இப்போது அதன் பொருள் என்னவென்றால், அந்த இடம் எங்கே இருக்கிறதென்று கண்டு பிடிப்போமானால். .அந்த ஆராதனை ஸ்தானம் கிறிஸ்துவில் மாத்திரமேயல்லாமல் வேறி டத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. நீ மனந்திரும்பலாம்; நீ அப்படி செய்யலாம். ஆனால் நீ அப்படிச் செய்கிறதில் ஆராதனை செய் கிறதில்லை, நீ மனந்திரும்புதலில் பன்னிப்பு தான் கேட்கிறாய். பேதுரு... பெந்தெகொஸ்தே என்னும் நாளில் அவர்கள் எல்லாரும் பல பாஷைகளில் பேசுகிறதைக் கேட்டார்கள். அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்டார்கள். அப்போது அவர்கள் சிரித் தார்கள். அவர்கள், ''இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக் கிறார்கள் குடித்தவர்களைப்போல ஆடுகிறார்கள்'' என்றார்கள். அந்த .. கன்னிகை என்று சொல்லப்படும் மரியாளுங்கூட அங்கே ஜெபித்த 120 பேரில் இருந்தாள். அவர்கள் ஆவியில் குடித்தவர் களைப்போல தடுமாறி பல பாஷைகளில் பேசினார்கள். ஆனால் ஜனங்களோ, 'இவர்கள் புதிய திராட்ச ரசத்தைக் குடித்து வெறி கொண்டிருக்கிறார்கள்'' என்றார்கள்.

83. ஆனால் பேதுரு எழுந்து நின்று, 'யூதர்களே, எருசலே மில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக. என் வார்த்தைக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறி கொண்ட வர்களல்ல பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே தீர்க்கதரிசியா கிய யோவேலினால் உரைக்கப்பட்டபடி யே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாமிசமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமார்த் திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் த ரி ச னங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங் களைக்காண் பார்கள் உயர வானத்திலே அற்புதங்களையும் தாழப் பூமியிலே இரத்தம். அக்கினி , புகைக் காட்டாகிய அதிசயங்களையும் காட்டு வேன். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன் னே கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறவன் எவ னோ அவன் இரட்சிக்கப்படுவான்'' என்றான்.

84. அவர்கள் இதைக் கேட்டபொழுது இருதயத்தில் குத்த பட்ட வர்களாய், ''சகோ தரரே, நாங்கள் என்ன செய்யவேண் டும்?'' என்று கேட்டார்கள்.

85. அதற்கு பேதுரு. " நீ ங்கள் மனந்திரும்பி, ஒவ் வொரு வ கும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவி பின் வரத்தைப் பெறுவீர்கள். இந்த வாக்குத்தத்தமானது எல்லா வருங்காலச் சந்ததிக்குமுள்ளது' என்றான்.

86 இப்போது நாம் அதை அறிகிறோம் நாம் அவரில் எப் படி வாசம் பண்ணமுடியும் என் பதைக் கண்டு பிடிப்போம் நாம் ஆராதனை ஸ்தானத்தினுள் எப்படிப் போக முடியும்? 1 கொரிந் தியர் 12-ம் அதிகாரம் இதற்கு பதிலளித்து முடிவு செய்கிறது. 'ஒரே ஆவியினால்' ஒரே சபையினாலல்ல, ஒரே பிரமாணத்தினா லல்ல, ஒரே ஊழியனாலல்ல, ஒரே பிஷப்பினாலல்ல, ஒரே ஆயக்கா ரனாலல்ல, ஆனால் ஒரே பரிசுத்த ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள் இயேசு கிறிஸ்துவின் சரீரத்துக்குள், ஞானஸ்நானம் பெற்றிருக்கி றோம் அந்த சரீரத்திலிருக்கும் வரத்தில் நாம் சுயாதீனராய் இருக்கிறோம். ஆமாம், ஐயா! சபையைச் சேருவதினாலல்ல. பிரமாணங்களை மனப்பாடமாக ஒப்புவிப்பதினாலல்ல, போற்றிப்பேசு வதிலும், இழி வாய்பேசுவதிலும், கைகுலுக்குவதினாலும், அல்லது வேறெதினாலும் இல்லை நாம் ஞனஸ்நனத்தினாலே இபேசு கிறிஸ்துவின் சரீரத்துக்குள் பிறந்திருக்கிறோம் ஆமேன்! ஒரே ஆவி பினாலே நாமெல்லாரும் ஒரே சரீரத்துக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் அந்த சரீரம் எது?

ஆதியிலே வார்த்தை இருந்தது. அது தேவனிடத்திலி ருந்தது. அது தேவனாயிருந்தது

அந்த வார்த்தை மாமிசமாகி நம்மில் வாசம் செய்தது - 37. அந்த சரீரத்திலி ருந்துக்கொண்டே வார்த்தையை எப் படி மறுதலிக்க முடியும்? அல்லது அதை சரீரத்திலில்லாதபடி வேறெங்கேயோ எப்படி வைக்க முடியும்? அவ் வண்ணம் நாம் எப்படிச் செய்யக் கூடும்?

88. தேவன் தெரிந்தெடுத்த ஸ்தலம். கவனி! வார்த்தையா கிய அவரை விசுவாசிப்பதே உண்மையில் நாம் அவருக்குள் ஞா ஸ்நானம் பெற்றுக்கொண்டதின் உண்மையான அடையா ளமாக இருக்கிறது. அவரு டைய ஒரு அங்கமாக இருக்கிற நீ அவரை எப்படி மறுதலிக்க முடியும்? என் கை என்னுடையது என்பதை நான் எப்படி மறுதலிக்க முடியும்? நான் அப்படி ... நான் அப்படிச் சொன்னால் என் மூளையில் ஏதோ ஒரு கலக்கம் இருக்கிறது நான் எப்படி... என் மூளை கலங் கியிருக்கு யா னால் தன் நான் இது என் கையல்ல என்றும் இது என் கால் அல்ல என் றும் சொல்வேன். ஒரு விசுவாசி வார்த்தையிலிருக்கும் தேவ வாக்குத்தத்தத்தை மறுதலிப்பானானால் அவனுடைய ஆத்தும நிலையில் ஏதோ ஒரு பிசகு இருக்கிறதென்பது புலனாகிறது! விசுவாசி என்று அழைக்கப்படும் அவனுடைய ஆத்மீக வாழ்க்கையில் ஏதோ ஒரு குறையிருக்கிறது!

89. நீ அவருடைய ஒரு பாகமாக இருக்கிறபடியினாலே நீ அவரிலிருந்து ஒரு எழுத்தையாகிலும் மறுதலிக்க முடியாது! பரி சுத்த ஆவியினால் நீ ஞானஸ் நானம் பெற்றிருப்பதாலும் அதன் மூலம் நீ இயேசு கிறிஸ்துவின் சரீரத்துக்குக் கொண்டு வரப்பட் டுள்ளதினாலும் நீ அவரில் ஒரு பங்காகத் துலங்குகின்றாய்.

90. எப்பேர்பட்ட ஒரு நேர்த்தியான காரியம்! சந்திக்க தேவனிடம் ஒரு குறிப்பிட்ட இடமாயிருந்தது-அவர் ஆபிரகா மைச் சந்தித்தார் அங்கே ஆபிரகாம் அவரைப் பணிந்து கொண் டான். துவக்கத்திலிருந்து முடியும்வரை ஆகமங்களில் இப்படிக் தான் குறிக்கப்பட்டுள்ளது அவருடைய வாக்குத்தத்தம் பண் ணப்பட்ட வார்த்தையை அவர் உன்னிலே விளக்குகிறார். அது உனக்கு விளங்குகிறதா? வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த் தையை நீ வசிக்கும் நாளில் மனிதர் விசுவாசிக்கும்படியாக தே வன் உன்னில் எழுகின நிருபமா!'ருக்கிறது நிறைவேறுகிறது. நீ எசைச் சாதிக்கிறாயோ அதுவல்ல! அது சேவன் உன் மூலம் செய்யும் காரியங்கள் நீ சாதிக்கும் காரியத்தைக் காட்டிலும் மேலானதாக இருக்கிறது. தேவன், 'விசுவாசிகளால் இன்னின்ன அடையாளங்கள் நடக்கும்'' என்றார். "அடையாளங்கள் உன் மூல மாக பேசுகின்றன.

91. இந்தக்காலம் எப்படியிருக்கும் என்பதை அவர் உரைத் தார். இன்றைக்கென்று அவர் வாக்களித்திருப்பதை அக்கால விசுவாசிகள் விசுவாசிப்பார்கள் இரட்சிக்கப்பட்ட அவர்கள் பே ழைக்குட் பிரவேசிக்க வேண்டியதாயிருந்தது . இரட்சிக்கப்பட எகிப்து தேசத்திலிருப்பது வெளியே வரவேண்டியிருந்தது. இப்போது எவரும் இரட்சிக்கப்பட கிறிஸ் துவுக்குள் வரவேண்டும். உரைக்கப்படும் வார்த்தையினுள் வரும்போது தான் அவர் நேற் றும் இன்று என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பது தெரியவரும்.

92. அந்த சரீரத்தில் எப்படிப் பிரவேசிக்கிறாய்? ஞானஸ்நா னத்தின் மூலம். தண்ணீர் ஞானஸ்நானத்தினாலா? பரிசுத்த ஆவி யின் (ஞ னஸ் நானத் தால்! ஒரே ஆவியின் மூலம் நாம் எல்லாரும் ஒரே சரீரத்துக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம்,

93. அவர் வாக்குத்தத்தம் பண்ணின வார்த்தையை நீ வி ளக்க அவர் அனுமதிப்பதில்லை -உன் முகம் அதை விளக்குவார். உன் நடையே அவர் வாக்களித்த விளக்கமாயிருக்கிறது அவரை பின்பற்றும் சபையானது ஜனங்கள் காண அவருடைய வடிவமா கவே இருக்கும். பேதுருவும் யோவானும் அலங்கார வாசலண் டை இருந்த மனிதனை குணப்படுத்தினபோது அவர்கள் இவ்விரு வரையும் கேள்விக்கேட்டார்கள். அந்த ஆயக்காரரர்கள் அந்த இரண்டுபேரும் படிப்பறியாதவர்கள் என்றும் பேதமையுள்ளவர் கள் என்றும் அறிந்தார்கள். எதனாலறிந்தார்கள்? அவர் செய்த தையே அவர்களும் செய்ததினால் அறிந்தார்கள் .

94, அவர் பிதாவுக்கடுத்தவைகளைச் செய்ய வேண்டும்.

95. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கி றார் என்பது ஞாபகமிருக்கட்டும். அவரில் மாத்திரமே தேவன் உன்னைச் சந்திக்கிறார். அந்த ஒரே ஸ் கலம் தான். இயேசுவிலே - அவர் தெரிந்தெடுத்த இந்த ஸ்தலத்திலேதான்-அவர் தமது நாமத்தை விளங்கப்பண்ணினார். இயேசு என்பது தேவனுடைய பெயர் . பிதா, குமாரன் , பரிசுத்த ஆவி என்பது இயேசு கிறிஸ் த வுக்கான பட்டப்பெயர்களே .

96. ''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜா கி களையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினா லே ஞானஸ்நானம் கொடுத்து என்று மத்தேயு எழுதின:ே :ா கி லும் இன்றைக்கு அதை எப்படி விளக்குகிறார்கள் டார். 'பிதா வின் நாமத்தினாலே, குமாரனின் நாமத்தினாலே, பரிசுத்த ஆவி யின் நாமத்தினாலே' என்று கூறுகிறார்கள். இப்படி அது எழுகப் படவில்லை. அது பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே (ஒருமை) ஒன் றிருக்கிறது . குமா◌ான் என்பது நாமமல்ல; பரி சுத்த ஆவி என்பதும் நாமமல்ல; பிதா என்பதும் நாமமல்ல அது வரு பட்டப்பெயர். பத்து நாட்களுக்குப்பின், பேதுரு எழுந்து நின்று, 'நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ் துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற் றுக்கொள்ளுங்கள்' என்றான். அவனுக்குச் சொல்லப்படாதக் கா ரியத்தையா அவன் செய்தான்? அவர் சொன்னதையே அவன் செய் கான்! பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தரா கிய இயேசு கிறிஸ் து எனப்படுகிறது.

97. புதிய ஏற்பாட்டிலிருக்கும் ஒவ்வொரு மனிதனும் கர்த் தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றிருக்கிறான். பட்டப்பெயர்களாகிய பிதா, குமாரன், பரி சுத்த ஆவியிலே ஒரு மனிதன்கூட ஞானஸ்நானம் பெற்றதாக வேதாகமத்தில் குறிப்பில்லை. ரோமாபுரியின் நிசேயா பட்டணத் திலே நிசேயா பிரமாணம் எழுதப்படும்வரை, இந்த பட்டப்பெயர் களில் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் காணப்படவில்லை. அது கத்தோலிக்கச் சபையின் உத்தரவாக இருந்தது அவர்களின் கத் தேகிஸ்முவில் (வினா-விடை போ கனாமுறை) இது நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. அது என்னிடமிருக்கிறது. (இது சரி!) - நம்முடைய விசுவாசத்தின் சத்தியங்கள் என்னும் புத்தகமும் பல்வேறு புத்தகங்களும்- அவை முழுமையாகக் கத்தோலிக்கப் பிரமாண மாயி ருக்கிறது. அது வேதாகமத்தில் இல்லை என்று கூறுவார்கள். போப் ஆண்டவருக்கு வேதாகமத்தின் வார்த்தைகளை மாற்ற அதிகாரம் உண்டு என்றும் கூறுவார்கள். அதை நான் ஏற்றுக் கொள்வதில்லை. இயேசு கிறிஸ் து நேற்றும் இன்றும் என்றும்

மாறாதவராயிருக்கிறார். 'எவனொருவன் வேதாகமத்திலிருந்து ஒரு வார்த்தையை எடுத்துப்போடுகிறானோ அல்லது அதனுடன் கூட்டு சிறானோ அவனுடையப் பங்கு ஜீவப் புத்தகத்திலிருந்து எடுத்துப் போடப்படும்' என்று இயேசுவே கூறியுள்ளார். ஒரு வார்த்தை ஒரு பாராவோ அல்லது வாக்கியமோ அல்ல. ஆனால் ஒரு வார்த் தை! 'எவனொருவன் ஒரு வார்த்தையை எடுத்துப்....'

98 . ஆதியிலே தேவன் தமது ஜனங்களை தமது வார்த்தையில் "னாலே பலப்படுத்தினார். ஒரு வார்த்தைக்கு க் தப்பர்த்தம் கொண் டால் அது மரணத்தையும் மனக்கஷ்டத்தையும் துன்பத்தையும் விளைவித்தது ஏவாள் - ஒரு வாக்கியத்தை மாற்றவில்லை அவள் ஒரு வார்த்தையை மாத்திரம் மாற்றினாள். இயேசு புத்தகத்தின் மத்தியிலே வந்தபோது, அவர் சொன்னது என்ன? 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த் தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே' என்றார். கடைசி புத்தகத்திலே, தரிசனத்தின் புத்தகம், வெளிப்பாடு 22ம் அதிகாரம் 18-ம் வசனத்திலே, வேதாகமத்தின் கடைசி பாகத்தி லே, அவர் தம்மைக் குறித்து, 'நான் சாட்சியாக எச்சரிக்கிறதா வ து: எவனொருவன் இந்தப் புத்தகத்தில் ஒரு வார்த்தையைக் கூட்டுகிறானோ அல்லது ஒரு வார்த்தையை எடுத்துப்போடுகிறானோ அவனுடையப் பங்கு ஜீவபுத்தகத்திலிருந்து எடுத்துப்போடப்படும் ஏனென்றால் அவன் ஒரு கள்ளத்தீர்க்கத் தரிசி, ஜனங்களைத் தப்பி தத்தில் வழிநடத்தினவன் அவன் அப்படிச் செய்த கினால், அந்த ஜனங்களின் இரத்தப்பழி அவன்மேல் இருக்கும்' என்றார்.

99. நாம் அந்த ஒரே ஆராதனை ஸ்தலத்தையே ஆசரிக்க வேண்டும். அது வார்த்தையான இயேசு கிறிஸ்து -நேற்றும் இன்றும் மாறாதவர். ஆமேன்! நல்லது. ஆராதனைக்காகச் சந் திக்கும் இடம் தேவன் தெரிந்தெடுத்ததேயல்லாமல் வேறில்லை.

100. புதிய ஏற்பாட்டுக்கும் பழைய ஏற்பாட்டுக்கும் மத்தியில் (அவர் வருவதற்குமுன்) யோவான். (இப்போது கவனமாய் கேள்; கூர்ந்து கவனி!) ஒருநாள் அந்தப்பெரிய கழுகாகிய யோவான் ஸ்நானன் வனாந்தரத்திலிருந்து பறந்துவந்து தன் சிறகுகளை

விரித்து யோர்தான் நதிக்கரையில் இறங்கினான்-அந்தப் பெரிய கழுகா கியத் தீர்க்கத்தரிசி பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் மத்தியில் ஒரு பாலத்தைக் கட்டினான்-ஜனங்களை எல்லா திசைகளிலிருந்தும் அழைத்தான். மனந்திரும் புதலின் நாளில் சத்தமிட்டான் அங்கே பரிசேயரும் சதுசேயரும் அவனிடத்தில் வந்தார்கள் அவன் அவர்களை நோக்கி, “ஆபிரகாம் எங்களுக்குத் கசப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்கா தீர்கள்: தேவன் இந்தக் கல்லு களினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல் லுகிறேன்' என்றான். ஓ என் கர்த்தாவே! அவன் தனக்களிக்கப் பட்ட சுவிசேஷத்தை பிரசங்கித்து சொன்னதைக் கவனியுங்கள்: 'உங்கள் நடுவிலிருக்கும் ஒருவரை நீங்கள் அறிவீர்கள். நான் இன்னும் அவரை வெளிப்படுத்தவில்லை. அவர் வரும் போது நான் அவரை அறிவேன் . நான் அவருடையப் பாதரட்சையின் வார்களை கழற்ற பாத்திரன் அல்ல. அவரே உங்களுக்கு அக்கினியாலும் பரிசுத்த ஆவியினாலும் ஞானஸ் நானம் கொடுப்பார். நூற்றுக்கூ டை அவர் கையிலிருக்கிறது அவர் களத்தை நன்கு சுத்தம் செய் து , பதருகளை அவியா த அக்கினியிலே சுட்டெரிப்பார்' என்றான்.

101. அந்த பெரிய சுவிசேஷக் கழுகு அங்கே உட்கார்ந்து , வருங்காலத்தைக் குறித்து சத்தமிட்டு பயமுறுத்தினது அப்போ து ஒரு சீர்கேடு அவன் முன் வந்த து-அல்லது ஏரோது , அக்கா லத்தின் சக்கர வர்த்தி, அதிகாரம் செலுத்தி வந்தவன், தன்னு டையச் சகோதரனின் மனைவியை மணம் செய்து கொண்டவன். அப்போது அந்தக் ச ழுகு சமாதான மாக அங்கே உட்கார்ந்திருக் கக்கூடும் என்று நினைக்கிறீர்களா?

சிலர் அவனிடம், 'விவாச மும் விவாகரத்தும்' என்பதை பிரசங்கிக்காதே, யோவான், ஏனென்றால் ஏரோது சும்மாவிட மாட்டான்' என்றார்கள்.

102. அவன் தீவிரமாய் அவனிடம் சென்று, நீர் உம்மு டையச் சகோதரன் மனைவியை வைத்துக்கொள்வது நியாயமல்ல! என்றான். அது தான் சரி. அவன் என்ன - அது என்ன? அவன்

வனாந்தரத்திலிருந்து வந்தக்கழுகு. அவன் மனிதனுடைய பயத்தினாலும் கடிந்து கொள்வதினாலும் பயிற்சி பெறாதவன். எது நல்லது என்று அறிய உன்னதமான தேவனுடைய பலத்தில் அவன் பழக்கப்பட்ட வன் . அவன் மேசியாவின் அடையாளத்தை அறிந் திருந்தான். அல்லேலூயா! (இந்த வார்த்தைக்கு 'நமது தேவ னைத் தோத்தரியுங்கள்' என்று பொருள்.) பயப்படாதே! இது வரை நான் யாரையும் புண்படுத்தவில்லை! எனக்கு இதுவரை அவர் வெளிப்படவில்லை. நான் எங்கே இருக்கிறேன் என்பதை அறிந்திருக்கிறேன்! ஓ, நான் அந்தப் பெரிய கழுகு அங்கே உட் கார்ந்திருக்கிறதை நினைக்கும் போது .....அவன், 'அவர் வரும் போது அவரைக் கண்டுகொள்வேன்' என்றான் .

103. ஒரு நாள் அவர், அங்கே நின்று பிரசங்கித்தார். ஆயக் காரரர் ஒரு பக்கம் நின்றுகொண்டிருந்தார்கள் . அவர்கள் அவரி டம், 'பலியும் காணிக்கையும் எடுபட்டுப்போகும் நாள் வரும் என் றா கூறுகிறாய்? நாங்கள் கட்டின இந்த ஆலயம் எவ்வளவு நாட் களாய் இதைக் கட்டினோம்-எவ்வளவு பெரிய ஸ்தாபனமாயி ருக்கிறோம். 'இதுவா இடிந்து விழும்?' என்று கேட்டார்கள் . .

அதற்கு அவர், 'அது பூமியின்மேல் இல்லாமற்போகும். காலம் வரும்' என்றார். அதற்கு அவர்கள், 'அப்படியாகாது நீ ஒரு கள்ளத்தீர்க்க தரிசி' என்றார்கள்.

104. அவன் (யோவான்) சுற்றிலும் பார்த்து, 'அதோ அங் கே அவர் இருக்கிறார்!' என்றான். அங்கே அந்த-தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஆராதனை ஸ்தானம், தேவாட்டுக்குட்டி உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி' என்றான் அவன், 'இங்கே மெத்தடிஸ்ட் வருகிறான்! பேப்டிஸ்ட் வருகிறான் , அல்லது கத்தோலிக்கன் வருகிறான்' என்று கூறவில்லை, 'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.' என்றான். அந்த ஒரே பத்திரமான ஸ்தலம் தேவ ஆட்டுக்குட்டி யானவரில் இருக்கிறது. அவரில் மாத்திரமே இரட் சிப்பு இருக்கிறது. எந்த சுபையிலும், பிரமாணத்திலும், எந்த ஜனத்திலும், எந்த உலகப் பிதாவிலும், எந்த மாதாவிலும், எந்த பரிசுத்தவானிலும், எந்தத் தீர்த் தஸ்நானத்திலும், வேறெதிலு மில்லை! அது பரிசுத்த தேவனில் இருக்கிறது. அவர்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மனுஷ குமாரனான அவர் மேல் தான் உலகத் தின் மீட்பை'தேவன் வைத்தார். பாவிகளாகிய நம்முடைய கிர யத்தை அவர் கட்டினார். அந்த ஸ்தலத்தில் மாத்திரமே இரட் சிப்பு இருக்கிறது .

105. அந்தக் கன்மலையின்மேல் தான் நான் நிற்கிறேன் அவ ருடைய அடையாளத்தை யோவான் கண்டுபிடித்துக் கூறினான். அவன் ; 'அவர் நடந்து வருகையில் நான் அவரை அறியவில்லை. அந்த வனாந்தரத்தில் தான் அவரைக் குறித்து கற்பிக்கப்பட்டேன் ....' யோவானுடையத் தகப்பனைப்போல அவன் வேதாகமக் கா லேஜிலே படிக்கவில்லை, கற்பிக்கப்பட அவன் ஆயக்காரரைப் போல இருக்கவில்லை. வனாந்தரத்திலே கற்றுக் கொண்டான் . வார்த்தைக்காக அவன் வனாந்தரத்திலே காத்திருந்து உன்னதமான தேவனுடைய மதபோதக காலேஜிலே கற்பிக்கப்பட்டான். ஒரு மானிடக்கூட்டம் போதித்தவைகளை அவன் கற்கவில்லை தேவனிடமிருந்தே கற்றுக்கொண்டான். யோவான் அண்ணாந்து பார்த்து பரிசுத்த ஆவி இறங்குவதைக் கண்டு, 'இவர் அவரே!' என்று சாட்சி கொடுத்தான். ஓ என் கர்த்தாவே! உங்களுடைய ஆராதனை ஸ்தானம் அதுவே அதுவே உங்களுடையப் புகலிடம் அதுவே உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி. சபையல்ல. பிரமாணமல்ல. வேறெதுவுமல்ல. அது. உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி .

106 . யோவான் அதை எப்படிச்சுட்டிக் காட்டினான்? அவன் 'பரிசேயரே சரி, சதுசேயரே சரி, ஏரோ தியரே சரி' என்று கூற வில்லை, அவன், 'ஆட்டுக்குட்டி அங்கே இருக்கிறது பார் . அது தான் அந்த ஸ்தானம் அவருக்குத்தான் அந்த நாமம் சூட்டப் பட்டிருக்கிறது . அவரே அந்த தேவன். வானத்தின் கீழ் வேறொரு நாமமில்லை' என்றான் .

107. அப்போது யோவானைக் குறித்து இயேசு என்ன சொன் னார் என்று பார். அவர் என்ன சொன்னார் என்பதைக் காண அவன் சிலரை அவரிடம் அனுப்பினான். இயேசு அவனைக் குறித் து, 'அவன் பிரகாசிக்கிற பெரிதொரு வெளிச்சமாயிருந்து இயேசு கிறிஸ்துவின் வருகையின், முதல் வருகையின் சமயம் அவர்கள்

பின்பற்றவேண்டிய வழியைக்காட்டினான்' என்றார். கவனமாய் கேளுங்கள்! அதைத் தவறவிடாதீர்கள்! யோவான் அந்த வெளிச் சமாய் இருந்தான் என்று இயேசு கூறினார்-மல்கியா 3- ம் அதி காரம். அதை குறித்து தப்பான கணக்கு போடாதே பெரிதொரு வெளிச்சத்தில் நின்று அவன் இயேசுவை அனுப்பப்பட்ட ஒரே ஒரு ஆட்டுக்குட்டி என்றுரைத் தான். அவரைக் குறித்து பேசிக் கொண்டிருந்த பல ஆட்டுக்குட்டிகளை அவர் மூர் என்றார். இங் கே ஆட்டுக்குட்டி இருந்தது. அந்த பெரும் வெளிச்சத்தையுடைய மனிதன்..... 'அவன் மல்கியா 3-ம் அதிகாரம்' என்றார். 'நான் என் தூதனை அனுப்புகிறேன். அவன் எனக்கு முன்பாகப்போய் வழியை ஆயத்தம் பண்ணுவான்' என்றார், 'ஆராதனை ஸ் தா னத்தைக் காட்டி, அவரிடம் செல்ல வழியை ஆயத்தம் பண்ணி னான்' என்றார். அது அவரே. அதில் தப்பு ஒன்றுமில்லை. அது அவரே. அடையாளங்கள் அவரைப் பின்தொடரக் காண்கிறேன். அவர் அவரே என்பது எனக்குத் தெரியும். வெளிச்சம் வானத்தி லிருந்து வந்து அவர் மேல் அமர்ந்ததை நான் கண்டேன்' என் றான். அவர் அவரே என்பதில் அவனுக்குச் சந்தேகம் இருக்க வில்லை

108, முடிக்கும்முன், என் சகோதரரே, சிலவற்றைக் குறித் து உங்களைக் கேட்க முற்படுகிறேன். நான் இதைக் கேட்க விரும்புகிறேன் : மல்கியா 4-ம் அதிகாரத்தில் நமக்கென்று வேறொரு கழுகு வாக்களிக்கப்பட்டிருக்கவில்லையா? ஒரு வெளிச்சத்தின் ஸ் தம்பம் பின்தொடர்ந்து இக்காலத்தில் தவறு செய்யும் சபைக்கு அவர் இதுவரையிலும்கூட எபிரேயர் 13:8 ஆக இருக்கிறார் என் று காட்ட வாக்களித்திருக்கவில்லையா? அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்! வனாந்தரத்திலிருந்து வே றொரு கழுகு பறந்து வர நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறதல்ல வா? ஆமேன்! இது சரியான சத்தியம்! லூக்கா 17: 30-க்கு அது எவ்வண்ணம் பொருத்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது கண்டீர் க ளா? இந்த வசனத்தில் மனுஷ குமாரனான கழுகு வந்து தம்மை வெளிப்படுத்தி மற்ற ஆராதனை ஸ்தானங்களான சபை ஸ் தாப னங்களை வெறுமையாக்குவார் என்று கூறப்பட்டு இருக்கிறது.

109. தேவன் தம்முடைய ஸ்தானத்தைத் தெரிந்தெடுத் தார். 'அதோ அவர்!' என்றான் யோவான் . ஆக, இன்று மல் கிய 7 4-ம் அதிகாரத்துக் கொப்ப அதேகாரியம் நமக்கு வாக்களிக் கப்பட்டிருக்கிற து . பிள்ளைகளின் இருதயத்தைத் திருப்பி, அவர் மரித்துப்போகவில்லை, இவைகளெல்லாம் வேறொரு காலத்துக் காக அல்ல . இயேசுவின் நாமத்தினாலே கொடுக்கப்படும் ஞான ஸ்நானம் பண்டையருக்கு மாத்திரமல்ல, அவர் இன்றைக்கும் மாறா த வராயிருக்கிறார் என்று சொல்ல நமக்கு ஒரு சழுகு வாக் களிக்கப்பட்டு இருக்கிறது! 'ஆமேன் கடைசிக் கழுகு மற்ற ஆராத னை ஸ்தானங்களை வெறுமையாக்கவே வருவான். மற்ற ஸ்தலங்கள் மூடத்தனம் என்று காட்டுவான்-ஸ் தாபனம் அறிவீனம்இதைச் சுட்டிக்காட்டி. அதே அடையாளத்தால் நிரூபித்து, அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறா தவர் என்பதற்கே அந்தக்கழுகு வெளிப்பட்டு இருக்கிறது. அல்லேலூயா!

110. வெளிப்பாடு ஆகமத்தின் 4:7 லும் கூட நாம் நான்கு மிருகங்களைக் குறித்து பார்த்தோம். நாம் பார்த்தபடி, முதலில் அது சிங்கமாயிருந்தது. அந்த மிருகம் தான் அந்த நாளின் எதிர் பைச் சந்தித்தது - யூதா கோத்திரத்தின் சிங்கம். அதற்குப்பிறகு வேறொரு மிருகம் வந்தது . அது ஒரு காளையாயிருந்தது. சுமைத் தாங்கும் மிருகம். பலிக்கான காளை. அப்போது ரோமாபுரியரின் மாதாகோவில் மரித்த து-அது ஒரு பலி. அடுத்தது ஒரு மனிதன் - மனித முகத்தையுடைய ஒரு மிருகம். அந்த மனிதன் சீர்திருத் தும் வாதிகளைக் குறித்தான் மனிதனுடையக் கல்வி, மதபோதக கல்வி முதலியன ஆனால் கடைசியான மிருகம் ஒரு பறக்கும் மிருகம். வேதாகமக்குறிப்பின்படி, கடைசியாக வரவேண்டிய மிரு கம் ஒரு பறக்கும் கழுகாக இருக்கிறது . அல்லேலூயா! அந்தத் தீர்க்கத்தரிசி இந்நாளில் 'வெளிச்சமுண்டாகும்' என்றான் . ஓ என் கர்த்தாவே! 'அந்நாளிலே வெளிச்சமுண்டாகும்' .

111. சீர்திருத்தும் வாதிகள் தான் வந்தது. அது பகலா அல்ல து இரவா என்று சொல்ல முடியாத ஒரு சாயலாக இருந்தது ஆனால் சாயங்காலமே கழுகின் வேளை...

கழுகின் வேளையிலே வெளிச்சமுண்டாகும், அப்போ மகிமையின் பாதை வெளிப்படும். ஜலத்தின் பாதையே இன்றைய வெளிச்சமாம்; பெரியவரே பிள்ளைகளே, பாவத்தினின்று திரும் பிடுவீர், இணையற்ற இயேசு நாமத்தில் ஸ்நா னிப்பீர்; அப்போ பரிசுத்த ஆவியின் வரம் பெறுவீர் . ஏனென்றால் சாயங்கால வெளிச்சம் வந்துள்ளது. தேவனும் கிறிஸ்துவும் ஒன் றென்கிறது.

ஆமேன்! சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும். தேவன் தெரிந்தெடுத்த ஒரே ஆராதனை ஸ்தானம்.

112 . ஓ, இந்தத் தூது எதற்காக வந்தது. அவன் என்ன? செய்யப்போகிறான்? அவனுடைய நாளின் சாயங்காலத்திலே அது வெளிச்சமாயிருக்கும்'. அடுத்தது என்ன? இஸ்ரவேலின் புத் திரர் எந்த அக்கினி ஸ்தம்பத்தினால் வழி நடத்தப்பட்டார்களோ அதே அடையாளத்தினால் இன்று அவன் பிள்ளைகளைத் திரும்ப உண்மையான வாக்களிக்கப்பட்ட தேசத் துக்கு வழிநடத்துவான் . இயேசு கிறிஸ்துவே தேவன் தெரிந்தெடுத்த ஆரா தனை ஸ்தானமா யிருக்கிறார். அந்த ஒரே ஸ்தலம் தான் இருக்கிறது. இரட்சிக்க அந்த ஒரே தேவன் தான் வந்திருக்கிறார். பரலோகக் குடும்பமும் பூலோகக் குடும்பமும் ஏசுகிறிஸ்து என்ற நாமத்தினால் மாத்திரமே! அழைக்கப்படுகிறது.

113. ஓ சபையே, ஓ ஜனங்களே, பாவியான நண்பனே, இயேசு கிறிஸ்துவைவிட வேறெதிலும் உன் நம் பிக்கையை வைக் காதே. எந்த பிரசங்கியிலும் நம் பாதே. உன்னை இரட்சிக்க வே றொருவனிலும் நம்பிக்கை வைக்காதே. எந்த சபையையும், எந் தப் பிரமாணத்தையும், எந்த சபைஸ் தாபனத்தையும் நம்பாதே . இயேசு கிறிஸ்துவில் மாத்திரமே உன் நம்பிக்கையை வை. ஏனென் றால் அவரே இந்த நாழிகையின் வெளிச்சமாயிருக்கிறார். ஜெபிக் கத் தலைவணங்குவோமாக:

கழுகின் வேளையிலே வெளிச்சமுண்டாகுகும், அப்போ மகிமையின் பாதை வெளிப்படும். ஜலக் கின் பாதையே இன்றைய வெளிச்சமாம்; பெரியவரே, பிள்ளை களே, பாவத்தினின்று திரும்பிடுவீர்

இணையற்ற இயேசு நாமத்தில் ஸ்நானிப்பீர்; 'அப்போ பரிசுத்த ஆவியின் வரம் பெறுவீர்; ஏனென்றால் சாயங்கால வெளிச்சம் வந்துள்ளது. தேவனும் கிறிஸ்துவும் ஒன்றென்கிறது .

114. ஓ சகோதர சகோதரிகளே, இதுவரை நீங்கள் மனந் திரும்பவில்லையானால் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெறவில்லையானால், இன்றிரவு உன் முடிவைச் செய். அவ ரை நீ ஆராதனை செய்யவேண்டிய ஸ்தலத்தில் உன்னை தேவன் கொண்டுவர அவருக்கு ஒரு வாய்ப்பைக் கொடு. அதற்கு வெளி யே வேறெந்த ஸ் தானத்திலும் தேவன் உன்னைக் சந்திக்க, ஆரா தனைக்கு அழைக்க, அவர் வாக்களிக்க வில்லை என்பது ஞாபகமி ருக்கட்டும்!

115. 'சகோதரன் பிரென்காம், நான் உண்மை பில் அவரை ஆராதிக்கிறேன்...' காயீனும் அப்படித்தான் செய்தான். ஆபேல் செலுத்தின ஒவ்வொரு பலியையும் அவன் செலுத்தினான். ஆனால் அது தவறாக இருந்தது. நீ ஆலயத்துக்குச் செல்லலாம், தசமபா கம் செலுத்தலாம், ஒரு கிறிஸ் த வனோ அல்லது கிறிஸ்தவளோ செய்யவேண்டியக் கடமைகளை நீயும் செய்யலாம். நான் முப்பது ஆண்டுகளாக இந்தப் பட்டணத்தில் சுற்றி சுற்றி இந்தச் செய்தி யைப் பிரசங்கித்தேன். நான் கிழவனா கிக்கொண்டு போகிறேன் , நான் இன்னும் நீண்ட நாட்கள் 7 யி ருக்கப்போவதில்லை. ஆனால், நியாயத்தீர்ப்பின் நாளிலே டேப்பில் பதிக்கப் பட்டுள்ள என்னு டைய சத்தம் உனக்கு விரோதமாகச் சாட்சி கூறும்!

116. ஒரே ஒரு ஸ் த லத்தில் மாத்திரமே அவர் தமது நாமத் தை விளங்கப்பண்ணினார். அது சபையிலல்ல. இயேசுவி லே மாத்திரம். ஒரே ஒரு ஆராதனை ஸ்தானமுண்டு ஒரே ஒரு ஸ்தா னத்தில் மாத்திரமே நீ ஏற்றுக்கொள்ளப்படுகி றாய். அந்த ஸ் தா னம் நமது அன்பர் இயேசுவிலே இருக்கிறது. வானத்தின் கீழெங் கும் வேறொரு நாமம் இரட்சிப்புக்கென்று மனிதருள் அருளப்பட வுமில்லை-ஆலயமல்ல, பிரமாணமல்ல . வேறெதுவுமல்ல-- இ யேசு கிறிஸ்துவே! இந்த நாழிகைக்கானச் செய்தி இதுவே. இது பிள்ளைகளின் இருதயத்தை பிதாக்களினிடத்துக்குத் திருப்பும்.

இதுவே ஒரு தடவைப்பரிசுத்தவான்களால் அளிக்கப்பட்டது இன் றிரவு இதை ஏற்றுக்கொள்ளமாட்டாயா?

117. நாம் ஜெபத்தில் தலைசாய்க்கும் போது, ஜெபத்திலே ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகிறவர்கள் கைகளை உயர்த்துங் கள். நீங்கள் அ தி க ஜனங்களாயிருக்கிறபடியால், உங்களைப் பீடத்தண்டை அழைப்பது உசிதமல்ல.

118. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. என் கர்த்தாவே என்னுடைய இடது பக்கத்தில் முன்னூறு பேர் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். (இப்போது என்னுடைய வலது பக்கம், நீங்கள் உங்கள் கைகளை உயர்த்துங்கள். ஜெபத்திலே வேண்டுதல் செய்து கொள்ள விரும்புகிறவர்கள் கைகளை உயர்த்துங்கள்) நூற் றைம்பது அல்லது அதற்குமேல் என் வலது பக்கம் இருக்கிறார்கள். இங்கே ஒரு கூடார ஆலயத்திலே ஒரு பெரியத் தண்ணீர் தொட்டி இருக்கிறது . ஒரு நேர்த்தியான ஊழியன் சகோ தரன் ஆர்மேன் நேவில், இன்னும் அநேக ஊழியர்கள் உங்களைச் சுற்றியிருப்பதை பாருங்கள். அவர்களைச் சந்தியுங்கள். ஒவ்வொரு பகலும், ஒவ் வொரு இரவும், எவ்வொரு நேரமும் மனந்திரும்பின ஜனங்கள் வந்தால் இந்த ஊழியர்கள் அங்கே காத்துக்கொண்டிருப்பார்கள். அந்த ஞானஸ்நான கற்பனைக்குக் கீழ்ப்படிந்தால், உங்கள் இருத யம் உண்மையானதானால், தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி நீங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள்.

119. ஆராதனை செய்ய ஒரே ஒரு இடமுண்டு. அது இந்த கூடாரமல்ல அது கிறிஸ்துவிலுள்ள து. அவரில் நாம் எப்படி பிரவேசிக்கிறோம்? ஒரே ஆவியினால், ஞானஸ்நானத்தின் மூலம் இந்த ஒரே சரீரத்தினுள் பிரவேசிக்கிறோம். ஜெபிப்போமாக.

120. அன்புள்ள தேவனே, உயர்த்தப்பட்டக் கைகள் அவர் களின் இருதயத்தில் உம்மிடமிருந்து உ த வி கிடைக்குமென்ற ஆழ்ந்த விசுவாசத்தைத் தெரிவிக்கின்றன பிதாவே, நான் இவர் களெல்லாருக்காகவும் வேண்டுதல் செய்கின்றேன். நான் உமது வேதவாக்கியத்தைக் குறித்து பேசப்போகிறேன். நீர், 'என் வச னத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன்

ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கிஜீவனுக்குட்பட்டிருக்கின்றான்' என்றுரைத் தீர்.

பிதாவே, இந்த நகரத்திலிருந்து ஒரு வாரத்துக்காக வெ ளியே போய் திரும்பிவந்து, 'பலானவர் எங்கே?' என்றால், 'ஏன், அவர்தான் மரித்துவிட்டாரே' என்கிறார்கள் 'அப்படியானால் அதைக் குறித்து....?' என்றால். 'அ வர் கள் மரித்துப்போய் விட் டார்கள் என்கிறார்கள்.

121. அன்புள்ள பிதாவே, நாங்கள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டோம். மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடக் கும் எதிர்ப்பை நாங்கள் ஒருவர் பின் ஒருவராய் சிந்திக்கவேண்டி யவர்களாய் இருக்கிறோம். ஒவ்வொருவரும் மரிக்கக்கூடியவர்க ளாய் இருக்கிறபடியால், அது அப்படி நடக்கிறது. ஆனால் இன்றிரவு நீர் கற்பித்த மனுவை எங்களுக்குக்கொடுத்தீர். அதாவது நாங்கள் அவரில் விசுவாசித்து அவர் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றால், நீர் எங்களை உமக்குள் அழைத்துக்கெ " ள்வீர்--கிறிஸ் துவின் சரீரமாகிய இந்த சரீரத்துக்குள் அழைத்துக் கொள்வீர். எ ந் த ஆலயத்திலுமில்லை ஏற் ெ+ னவே ஞாயந்தீர்க்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சரீரத்துக்குள் அழைத்துக் கொள்வீர். அந்த சரீரம் ஞாயத்தீர்ப்புக்கு வருவதில்லை. தேவன் தம்முடைய உக் கிர கோபத்தை அந்த சரீரத்தின்மேல் ஊற்றினார். அவர் எங்க ளுக்காக மரித்ததால், அந்த சரீரத்தில் இப்போது பாவம் இல்லை. தேவகுமாரனாகிய இயேசு சிறிஸ்துவின் இரத்தம் எங்களை சகல பாவங்களிலிருந்தும் அசுத்தத்திலிருந்தும் சுத்தமாக வைக்க நாங் கள் ஒருவருடன் ஒருவர் சக வா சம் வைக்கிறோம்.

122. பிதாவே, தேவனே , இவர்கள் ஒவ்வொருவரையும் உம்முடைய ராஜ்யத்துக்குக் கொண்டுபோக வேண்டிக்கொள்கின் றேன். தேவனே, இவர்களை ஏற்றுக்கொள்ளும். இவர்களில் ஒவ் வொருவரும், வாலிபப்பிள்ளையும் பெண்ணும், புருஷனும் ஸ்திரீ யும் காணாமற்போகா திருப்பார்களாக. இரத்தத்துக்குக் கீழ் இல்லாத என் சொந்த ஜனங்களும் இங்கே உட்கார்ந்து கொண்டி ருக்கிறார்கள் , கர்த்தாவே, என் தகப்பனாரின் வார்த்தையை

நான் நன்றாக ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். அன்புள்ள தேவ னே, இவர்களில் ஒருவரும் கைவிடப்படா திருப்பார்களாக கர்த் தாவே, அவர்களை ஏற்றுக்கொள்ளும். பூரணமாய் நான் உம்மை நம்பிக கொண்டிருக்கிறேன் .

123. இன்றிரவு , இந்த இடத்திலே இருக்கும் சகோதரர் மேலும், சகோதரிகள் மேலும், நண்பர்கள் மேலும், இன்னும் தொலைபேசியின் மூலம் செய்தியைக் கேட்பவர் ள் மேலும், நீர் அசைவாடியருளும். பல நாடுகள், கிழக்குக்கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரைவரை கேட்டுக்கொண்டிருப்பவர்கள் மேலும் அசைவாடியருளும். டக்ஸன் பாலைவனத்திலிருப்பவர்கள்மேலும் கலிபோர்னியா, நெவடா, ஐடாவோ, இன்னும் கிழக்கிலிருக்கும் டக்ஸாஸ் முதலிய இடங்களிலும், சிறு ஆலயங்களிலும், பெட் ரோல் பம்ப் ஸ்டேஷன்களிலும், வீடுகளில் உட்கார்ந்து கேட்டுக் கொணடிக்ருகிறவர்கள் மேலும் நீர் தயவாய் அசைவாடியருள, அன்புள்ள தேவனே, நான் வேண்டிக் கொள்கின்றேன். ஓ தேவ னே, காணாமறபோன புருஷரும் ஸ்திரீகளும், வாலிபரும் பெண்க ளும் இந்த நேரத்தில் உம்மிடம் வருவார்களாக. இவர்களை இப் போது அங்கீகரித்தருளும். நேரம் இருக்கும்போதே இந்த பாது காப்பான ஸ்தலத்தை அவர்களுக்குக் காட்ட இயேசுவின் நாமத் தில் வேண்டிக்கொள்கின்றோம். ஏனென்றால், சுவற்றின்மேல் எழுதப்பட்ட கையெழுத்தை நாங்கள் காண்கின்றோம். உலகம் அதிர்ச்சியடைந்திருப்பதைக் காண்கின்றோம் மீட்பின் நாள் நெருங்குவதைக் காண்கிறோம். மற்ற பாகங்கள் பூகம்பத்தால் உருளுவதையும் வெடிப்பதையும் காண்கின்றோம். இவை இயேசு கூறினபடி யே நடந்தேறுகின்றன. கர்த்தாவே, இவர்களைத் தவ ணையின்றி கூப்பிட்டருளும். உமது தயவை இவர்கள் ஏற்றுக் கொள்வார்களாக. ஏனென்றால் நாங்கள் இவர்களை உமக்கு இந்த சுவிசேஷக் கூட்டத்தின் வெற்றியின் சின்னமாக அளிக்கிறோம். இயேசுவின் நாமத்திலே. ஆமேன்.

124: நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா?தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. என் இடதுபக்கம் இருக்கிறவர்களில் எத்த னைபேர் இதை சத்தியமென்று விசுவாசிக்கிறீர்கள்? உங்கள்

கைக ளை உயர்த்துங்கள் பார்ப்போம்? வலது பக்கம் எத்தனை பேர், கைகளை உயர்த்துங்கள்? தேவன் உங்களை அசீர்வதிப்பாராக. நான் பார்க்கிறபடி உங்களில் ஒவ்வொருவரும் விசுவாசிக்கிறீர்கள் சிநேகிதரே, இது சத்தியம். இது சத்தியம் என்பதை தேவன் அறிவார்.

125. இப்போ து, நீங்கள் அவரில் இருக்கிறதினால், அவரில் நீங்கள் நிலைத்திருக்கிறதினால், அவர் எவைகளுக்காக மரித்தாரோ அவைகளைப்பெற உங்களுக்கு வழியுண்டு அவர் எதற்காக மரித் தார்? 'நம் முடைய மீறு கல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங் களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆம் கினை அவர்மேல் வந்த து ; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் ' நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா? அவருடைய பாவ நிவாரணபலியில் நீங்கள் இப்போது குணப்படுவீர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா?

126 நமது நடுவில் யாரேனும் அசுகமாக இருக்கிறீர்களா? வலது பக்கம் அல்லது இடது பக்கம், அவர்கள் தங்கள் கைகளை உயர்த்தட்டும். பெரிய வியாதியஸ் தக் கூட்டம். நான் உங்களை வரிசையாக நிற்கச் சொல்ல முடியாது. பாருங்கள் , என்னிடமில் லை- நான்-பீடத்தின் மேல் நிற்கமுடியாது அப்படிவர வழியில் லை. கூடார ஆலயத்திலே, வியாதியஸ்தருக்காக சபைகளிலே ஜெபக்கூட்டங்களை நடத்துகிறார்கள். நான் சிலவற்றை உங்களி டம் கேட்கப்போகிறேன். இங்கே எத்தனை விசுவாசிகள் இருக்கி றீர்கள்? உங்கள் கைகளை உயர்த்துங்கள். சரி. கிறிஸ்துவாகிய வார்த்தையை நான் உங்களுக்குக் காட்டப்போகிறேன். உலகத் துக்குக் கடைசி அதிகாரம்-- அதாவது, சபைக்கு. அவர், 'விசு வாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன:வியாதியஸ் தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்' என்றார். மாற்கு 16-ம் அதிகாரத்தில் இது எழுதப் பட்டிருப்பது சத்தியம் என்று எத்தனை பேருக்குத்தெரியும்? ஆமேன் என்று சொல்லுங்கள். (சபை ஆமேன் என்கிறது ) . சரி, நீ விசுவா சியாயிருக்கிறதனால், நான் உங்கள் கைகளை உங்களுக்கு எதிரில் இருக்கிறவர்கள்மேல் வைக்கச் சொல்கிறேன். எதிரில்

இருப்ப வர்கள்மேல் உங்கள் கைகளை மாத்திரம் வையுங்கள். நாம் ஒவ் வொருவரும் மற்றவர்களுக்காக இப்போ து ஜெபிப்போம். உங் கள் சுற்றிலும் இருக்கும் ஒருவர் மேல் உங்கள் கைகளை வையுங்கள்.

127. கர்த்தாவே, எனக்கெதிரில் கைகுட்டைகள் நிறைந்த ஒரு பெட்டி இருக்கிறது. சிறு துணித்துண்டுகள் . வயதானத் தாய்மார் எங்கேயோ வியாதியால் மரிக்கிறார்கள். அல்லது மரிக் கும் தறுவாயில் இருக்கும் குழந்தைகள் இருக்கலாம், பல இடங்க ளில் வியாதியஸ்தர் உள்ளனர் பவுலின் சரீரத்திலிருந்த துணிகளை துண்டாக்கி வியாதியஸ் தர்மேலும், அசுத்த ஆவி பிடித்தவர்கள் மேலும், கெட்ட ஆவி பிடித்தவர்கள் மேலும் போட வியாதியும் சுகவீனங்களும் ஜனங்களை விட்டன. இப்போது கர்த்தாவே, நாங்கள் அங்கிருந்த பவுல் அல்லர். ஆனால் நீர் இன்னமும் இயே வாக இருக்கிறீர். அதுவே ஆராதனைக்கென்று நீர் தந்த ஸ்தல மாயிருக்கிறது . இப்போது, இன்று அக்கால விசுவாசிகளைப்போல இவர்களும் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தார்கள். இவர் களுக்கும் நீர் நிச்சயமாய் ஒரு வழி வகுத்தீர் . நான் இந்தக் கைக் குட்டைகளின் மேல் கை வைத்து ஜெபிக்க , யார்மேல் இவை இயே சுகிறிஸ்துவின் நாமத்தில் வைக்கப்படுகின்றனவோ அவர்களின் சரீரம் வியாதியிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் நீர் விடுதலையாக்க வேண்டுகின்றேன்.

128. இப்போது, இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலி ருந்து வரிசை கிரமத்தில் வெளியே வந்தார்கள் என்றும் அவர் கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குச் சென்றுகொண் டிருந்தார்கள் என்றும் நாம் கற்பிக்கப்பட்டோம். செங்கடல் அவர்களுக்குக் குறுக்கே நின்றது. அப்போது தேவன் அக்கினி ஸ் தம்பத்திலிருந்து அதை உற்றுப்பார்த்ததும், கடல் பயந்து பின் சுருண்டு இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக் குப் போகவிட்டது ஓ தேவனே, இன்றிரவு , இயேசுகிறிஸ்துவின் இரத்த வழியாக கீழே பபரும். அப்போது வியாதிகளெல்லாம் பின் சுருண்டு, சாத்தானை வெளியே தள்ளி, வாக்குத்தத்தம் பண் ணின பலத்தையும் சரீரசுகத்தையும் ஜனங்கள் பெற வழியுண்டா கும். அப்போது தேவனாகிய நீர், 'நீ எல்லாவற்றிலும்

வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்' என்று (பவுலின் மூலம்) உரைத்த வார்த்தை நிறைவேறும்.

129. இப்போது கர்த்தராகிய இயேசுவே, நீர் பார்க்கிற படி ஒரு ஆள் மற்றவர்மேல் கை வைத்து, நீர் 'விசுவாசிக்கிறவர் களால் நடக்கும் அடையாளங்களாவன' என்று சொன்ன வார்த் தை இவர்களுடைய விசுவாசத்தின் சின்னமாயிருக்கிறது . இவர் கள் ஒருவருக்கொருவர் தாங்களே ஜெபிக்கிறார்கள். பக்கத்திலி ருக்கும் விசுவாசி வியாதிபிடித்த சகோதரனுக்காக ஜெபிக்கிறான்.

130. இப்போ து, கர்த்தாவே, பெரிய வீராப்பு அடிக்கும் சாத்தானை எதிர்த்து நின்றோம். தேவனுடையப் பிள்ளைகளை கட்டிவைத்திருக்க அவனுக்கு ஒரு உரிமையுமில்லை. அவன் தோற் கடிக்கப்பட்ட மிருகம் . அந்த ஒரே ஆராதனை ஸ் தானமும் ஒரே நாமமுமான இயேசு கிறிஸ்து அவனைக் கல்வாரி மலையிலே தோற் கடித்து அவர் சிந்தின அதே இரத்தத்தால் ஒவ்வொரு நோயும். வியாதியும் தோற்கடிக்கப்படவும், சாத்தான் சபையைவிட்டு அக லவும் உம்மை வேண்டிக்கொள்கின்றேன். பிசாசே, இயேசு கிறிஸ் துவின் நாமத்திலே ஜனங்கள் விடுதலைப்பெற, நீ அவர்களை விட்டு வெளியே போ.

131. சரீர சுகத்தைப்பெறும் ஒவ்வொருவரும் எழுதப்பட்டி ருக்கும் வார்த்தையின் ஆதாரத்தில் எழுந்து சாட்சியாக நின்று, 'நான் இயேசு கிறிஸ்து வின் நாமத்திலே குணப்பட்டதை ஏற்றுக் கொள்கிறேன்' என்று சொல்லுங்கள். எழுந்து நில்லுங்கள். தேவனுக்குத் து தி உண்டாவதாக! விசுவாசித்ததின் ஆசீர்வாதத் தைப் பார்! இங்கே கவனி , முடவர்களும் நொண்டிகளும் எழுந்து நிற்பதைப் பார்! கர்த்தருக்குத் தோத்திர முண்டாவதாக! அதோ பார். நம்பு. அவர் இங்கே இருக்கிறார். எவ்வளவு ஆச்சரியம்!

132 தொலைபேசியின் மூலம் கேட்டுக்கொண்டிருக்கும் சபை யாரே, இங்கே நடக்கிறதைப் பாருங்கள் . நான் பார்க்கும்வரை ஒவ்வொரு முடவனும் எழுந்து நிற்கிறான் அநேகர் இப்போது எழுந்திருத்து கொண்டு இருக்கிறார்கள் . ஓ எவ்வளவு ஆச்சரியமா ன சமயம்! கர்த்தருடையப் பிரசன்னம்! அது தான் எங்கே கர்த் தருடையப் பிரசன்னம் இருக்கிறதோ, அங்கே

விடுதலையுண்டு, அங்கே சுயாதீனமுண்டு தேவனுடைய ஆவி நம்மை விடுதலையாக் குகின்றது

133. அவர் நம்மை இப்போது குணப்படுத்தினார் என்று நம் புகின்றோம். அவர் நம்மை இரட்சித்தார்; அதை நாம் நம்புகி றோம். ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறவர்களுக்கு தண்ணீர்த் தொட்டி தயாராக இருக்கிறது. எந்த சமயத்திலும், எந்த நேர மும் ஞானஸ்நானம் எடுக்க விரும்பினால். ஞானஸ்நானம் கொ டுக்க அங்கே ஒரு ஊழியன் இருப்பான். இப்போது, நாம் ஆராதனையை முடிக்குமுன் , இச்சபையின் ஒரு பழைய ஞானப்பாட்டை பாடுவோம். நேசிக்கிறேன், நேசிக்கிறேன், முதல் அவர் என்னை நேசித்தார். நாம் நமது கைகளை உயர்த்தி நமது இருதயத்தின் ஆழத்திலிருந்து பாடுவோமாக. இதே ஆலயத்தில் விவாகமும் விவாக ரத்தும் என்னும் பிரசங்கத்தைக் கேட்போம். நம் சேர்ந்து பாடுவோமாக:

> நேசிக்கிறேன் (அதை இந்தப் பெருஞ்சபைப் பாடட்டும். தொலைபேசியின் மூலம் கேட்கிறவர்களும் பாடுங்கள்) அவர் என்னை நேசித்தார்; கல்வாரி மரத்தில் என் ரட்சிப்பை விலைக்கு வாங்கினார்.

134. அவர் எங்கே வாங்கினார்? கல்வாரி மரத்தின்மேல்! நாம் மறுபடியும் பாடுகையில், உங்களுக்கு அக்கம் - பக்கம் இருக்கிற வர்களுடன் கைகுலுக்கி, 'யாத்திரியே, உன்னை தேவன் ஆசீர் வதிப்பாராக' என்று சொல்லுங்கள். அதுதான் என் விருப்பம்:

நேசிக்கிறேன், நேசிக்கிறேன் முதலில் அவர் என்னை நேசித்தார்; கல்வாரி மரத்தில் என் ரட்சிப்பை

விலைக்கு வாங்கினார்.

135. ஓ நீங்கள் அவரை நேசிக்கிறீர்களல்லவா? அவர் ஆச்ச ரியமானவர் அல்லவா? அவர் உங்களுடையப் புகலிட மல்லவா? களைப்பான தேசத்துக்கு அவர் கன் மலையாகவும், புயல் காற்றில் அவர் ஒதுங்குமிடமாகவும், எனக்குத் தெரிந்த ஒரே புகலிடமும் அவரே. ஆகவே,

கல்வாரியின் ஆட்டுக்குட்டியே, என் விசுவாசம் உம்மை நோக்குகிறது , அருள் நிறைந்தவர் , பூரண இரட்சகர், தேவரீரே. ஜெபத்தைக் கேட்கவும் பாவத்தை நீக்கவும் ) பரத்தில் சேர்க்கவும்- தேவரீரே (நாம் நமது கைகளை உயர்த்துவோமாக.) கல்வாரியின் ஆட்டுக்குட்டியே என் விசுவாசம் உம்மை நோக்குகிறது. அருள் நிறைந்தவர், பூரண இரட்சகர், தேவரீரே ஜெபத்தைக் கேட்கவும் பாவத்தை நீக்கவும் பரத்தில் சேர்க்கவும்--தேவரீரே. (இப்போது தலைவணங்கி மௌனமாகப் பாடுவோம்) இருளில் நான் நடந்து திகைக்க, துக்கமும் துன்பமும் என்னை சூழ்கின்றன. பூமியில் துக்கமும் சஞ்சலம் கஸ்தியும் பெருகினும் சலிப்பில் களிப்பும் துன்பத்தில் இன்பமும் அளித்து வழிநடத்துபவரும் நீரே.

நீங்கள் தலைவணங்கியிருக்க , நமது அன்புக்குரிய ஊழியன் சகோ தரன் ஆர்மேன் நேவல் ஆராதனையை முடிப்பார்.